# குழப்பத்தின் சுற்றுப்பாதை

அன்புள்ள அம்மாவுக்கு! ஒரு வார்த்தைகூட எழுதப்படிக்கத் தெரியாத உனக்குக் கடிதம் எழுத வேண்டும் என்கிற இந்த எனது எண்ணம் என் விருப்பத்தின்பால் மட்டுமல்ல, எனக்கு உன்மீது உருவாகியுள்ள கட்டுக்கடங்காத கோபத்திற்கு வடிகாலாகவும்தான் இக்கடிதத்தை எழுத ஆரம்பிக்கிறேன். நிச்சயமாக இது உன் கைகளை வந்து சேரப்போவதில்லை. நான் அனுப்பப்போவதும் இல்லை. ஏனென்றால் வாசிக்கத் தெரியாத உனக்கு வேறு யாராவது வாசித்துக் காட்ட முயன்றால் உனக்கு அது மாபெரும் மனக் கஷ்டத்தை, அவமானத்தை இக்கடிதம் தரக்கூடும். அதன் பிறகு நீ தீராத மனவேதனைக்கு உள்ளாவாய். ஏற்கெனவே இதய நோயாலும் இன்னும் பிற நோய்களாலும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் உனக்கு இக்கடிதம் மேலும் கொஞ்சம் அழுத்தங்களைத் தந்து உன்னைக் கொன்றுவிடக் கூடும். நிச்சயமாக நான் அந்தத் தவற்றைத் தெரிந்தே செய்யமாட்டேன். அம்மா உனக்குத் தெரியாது, நான் உன்னை எவ்வளவு நேசித்தேன், நேசித்துக் கொண்டிருக்கிறேன், நேசிக்க விரும்புகிறேன் என்பது. அது நிச்சயம் வார்த்தைகளுக்குள் வடிவமைத்துவிட முடியாத நேசம்.

முதலில் ஒன்றை உன்னிடம் தெளிவு படுத்த விரும்புகிறேன்.

நீ நினைப்பதுபோல நான் உன்மீது அன்பற்றவள் அல்ல. நீ அப்படி நினைத்துக் கொண்டிருக்கிறாய் என்பதை அறிவேன். அப்படி நினைத்துக் கொண்டிருப்பதே என்னைப் பல இரவுகள் உறங்க விடாமல் செய்திருக்கின்றன, தெரியுமா உனக்கு? ஒரு பெண் பிள்ளையைப் பார்த்துப் பெற்ற தாய் அப்படி நினைப்பதென்பதே எப்படி வருத்தமான செய்தியாக இருக்கும்? இருந்தாலும் அப்படியான சந்தர்ப்பமும்கூட இப்போது வாய்த்திருக்கிறதான எண்ணம் எனக்கும் வந்திருக்கிறது. சில நாட்களாகவே உன் மீதான எனது பிரியம் குறைந்துகொண்டிருக்கிறதோ என்கிற பயம் என்னை வதைத்துக்கொண்டிருக்கிறது. உன்னை வெறுக்கத் துவங்குகிறேனோ என்கிற அந்த அச்சம் துரதிர்ஷ்டவசமாக என்னைத் துரத்திக்கொண்டிருக்கிறது. ஒரு

துர்க்கனவைப்போல. நான் ஏன் இந்தக் கடிதத்தை எழுதப்படிக்கத் தெரியாத உனக்கு எழுத நினைத்தேன்? எனது வருத்தத்தை, உன்மீதான கோபத்தை, யாரிடமும் பகிர முடியாத, உன்னிடமும் சொல்ல முடியாத கனத்த பொழுதொன்றில் இந்தக் கடிதத்தின் வழியே என்னை நானே ஆற்றுப்படுத்தும் விதமாகத்தான் எழுதிக்கொண்டிருக்கிறேன். நிச்சயமாக உனக்கு அனுப்புவதற்காக அல்ல.

காஃப்கா தன் தந்தைக்கு எழுதிய கடிதத்தைப் போலத்தான் இதுவும். எப்போதுமே ஒரு தந்தையோடு மகன் முரண்படுவதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்க முடியும் என்பது அனைவரும் அறிந்த விசயம்தான். ஆனால், தனது அம்மாவோடு முரண்பட பெண்பிள்ளைகளால் முடிவதேயில்லை; காரணம் அத்தனை ரகசியமானதல்ல. முன்னமே தந்தைகளால் அவமதிக்கப்படுகிற அம்மாக்களைப் பெண் குழந்தைகளினால் வெறுத்துவிட முடிவதில்லை. அது சாத்தியமுமில்லை. வீடுகளில் அம்மாக்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள இடங்கள் எத்தகைய மன அழுத்தத்தைத் தரக் கூடியவை என்பதையும் அவ்விடங்களுக்குள்ளாக அவர்கள் சுணங்கித் திரிவதையும் அழுது தவிப்பதையும் அவமானத்தினால் குறுகிக் கிடப்பதையும் தங்களைத் தாங்களே முடக்கிக் கொள்வதையும் தங்களைத் தாங்களே வியந்து பாராட்டும் வினோத காட்சிகளையும் கண்டு வளர்ந்து, கூடவே இருக்கும் பெண் குழந்தைகளால் எப்போதும், எந்தக் காலத்திலும், எந்த நிலையிலும் வெறுப்பது சாத்தியமில்லை என்றுதான் நம்பிக்கொண்டிருந்தேன், நீ ஷர்மிளாவை வீட்டைவிட்டு அனுப்பும்வரை.

உனக்குத் தெரியாது எனது தந்தை உன்னைக் கண்டபடி திட்டும்போதும் அடித்துத் துன்புறுத்தும் போதெல்லாம், நான் எத்தனை மன அவஸ்தைப்பட்டிருந்தேன் என்று! ஒரு கொலைகாரியாக மாறுவதற்கான அத்தனை நியாயங்களையும் அவசியத்தையும் அவரது செயல்பாடுகள் தந்திருக்கின்றன எனக்கு. நீ அவருக்கு அடிபணிந்து செய்யும் பணிவிடைகள், பணி விடைகள் என்றால் வெறுமனே சமைத்துவைப்பதோ துணி துவைப்பதோ வீடு சுத்தம் செய்வதோ அர்த்தம் இல்லை. நிஜமான பணி விடைகள். அவர் வெற்றிலை போடுவதற்கு நீ காம்பு கிள்ளித் தரவேண்டும். அவர் போடும் செருப்பைக் கழுவி எடுத்து அவர் மறுநாளைக்குப் போடுவதற்கான இடத்தில் வைக்க வேண்டும். அவரது மூக்குக் கண்ணாடியைக் கழுவித் துடைத்து வைக்க வேண்டும். திண்ணையில் உட்கார்ந்து அவர் ஷேவ் செய்வதற்கு முகம் பார்க்கும் கண்ணாடி, ஷேவிங் ரேஷர், சோப்பு, குவளையில் தண்ணீர் எல்லாம் நீதான் எடுத்துவைக்க வேண்டும். அப்படி நிறைய

சொல்லிக்கொண்டே போகமுடியும் என்னால். எல்லாம் அவர் மீதான பயத்தினால் மட்டுமல்ல, உனது மனதில் நீ எனக்குக் கற்றுத்தர விரும்பிய செய்தியாக இருந்ததையும் அறிவேன். ஒரு பெண் எப்படி கணவனிடம் நடந்துகொள்ள வேண்டும் என்பதைத் தனது செயல்பாடுகளின் வழியே நீ போதிக்க விரும்பியதற்கான காரணங்களை நீ எனது செயல்பாடுகளின் வழியேயும் எனது நடவடிக்கைகளின் மூலமாகவும் யாரையும் எதிர்க்கக்கூடிய எனது செயல்பாடுகளினால் அறிந்திருக்கலாம். அதனாலேயே நீ எனக்கு நல்ல மனைவிக்கான மனைவியாக இருக்கக்கூடியவள் எப்படி இருக்க வேண்டும் என்கிற போதனைகளை எனக்குப் போதிக்க விரும்பியிருக்கலாம்.

நினைத்தபொழுதுகூட எனக்கு உன்மீது கோபம் வரவில்லை. பரிதாபம் மட்டும்தான் மிஞ்சியிருந்தது. நீ வளர்க்கப்பட்ட விதம் அப்படி, அதனை நான் சரியாகப் புரிந்துகொண்டேன் என்றுதான் நம்புகிறேன். பெண்கள் கணவனுக்கும் குடும்பத்திற்கும் அடங்கி வாழ வேண்டும், பணிவிடை செய்ய வேண்டும், எதிர்த்துப் பேசக் கூடாது என்பதை எப்போதுமே பார்த்தும் செய்தும் வாழ்ந்தும் வரக்கூடிய குடும்ப சமூக அமைப்பிலிருந்து வரக்கூடிய உனக்கு, நான் அவ்வப்போது அத்தாவிடமும் அண்ணன்களிடமும் காட்டும் கோபமும் முரண்பாடுகளும் உன்னை வருத்தியிருக்கவோ, பயம் காட்டியிருக்கவோ கூடும்.

ஆகையினால்தான் நீ வளர்க்கப்பட்ட விதத்தை யோசித்தபடி அதனை ஏற்றுக்கொள்ள முயன்றேன்.

அதுமட்டுமா, உன்னைவிட இரண்டு மடங்கு வயதில் மூத்தவரின் மூன்றாவது மனைவியாக ஆக்கியதும் இந்தச் சமூகம்தான். அந்தப் பாழாய்ப்போன சமூகத்தின் விருப்பத்திற்கேற்ப வாழவிரும்பிய உன்னை எப்போதும் வெறுத்ததில்லை, வெறுக்கவும் முடியாது என்றுதான் நினைத்திருந்தேன். ஆனால் இன்று அது நடந்துவிடுமோ என்கிற தீராத பயம் என்னை ஆட்டிப் படைக்கிறது. நீ ஷர்மிளாவை அனுப்பிய பிறகுதான் இப்படி. உன் மீதான என் கோபம் வலுப்பெறும் போதெல்லாம், நான் நீ காலையிலிருந்து இரவுவரை இருண்ட அடுப்படியிலும் அதிகாலைப் புகை மூட்டத்தினூடே அடுப்புக் கரியை நிரப்பி வெண்பாவில் வெந்நீர் போடுவதை நினைத்துக்கொள்வேன். உன்மீதான எனது வருத்தம் சட்டெனக் கரைந்துபோய்விடும். அதேபோல பல நாட்கள் இரவு நேரங்களில் அத்தா தான் பறைசாற்ற விரும்பும் மத நம்பிக்கைகளுக்கும்

பெருமைகளுக்கும் ஏற்பாடு செய்கிற அஷரத்களுக்கான விருந்திற்காக மாலையிலிருந்து இரவுவரை அடுப்படியில் பச்சை விறகுகளுடன் போராடி நீ தயாரிக்கும் இடியாப்பங்களையும் மட்டன் குருமாவையும் மலைபோல அடுக்கப்பட்டிருக்கும் பரோட்டாக்களையும் நினைத்துக்கொள்வேன். உன்மீதான என் கருணை பலமடங்கு ஊற்றெடுத்து ஓடும்.

நீ பலமுறை உன் குழந்தைப் பருவத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறாய். அதைக் கேட்கும்போதெல்லாம் நான் பல நாட்கள் அழுதிருக்கிறேன், உனக்கே தெரியாமல். நீ அறிந்தோ அறியாமலோ உனக்குக் கிடைத்த மோசமான குழந்தைப்பருவம் எனக்குக் கிடைத்துவிடக் கூடாது என்று நீ என்னை எத்தனை சீராட்டியிருப்பாய் என்பதை நான் எப்பொழுதும் அறிந்துதான் இருக்கிறேன் அம்மா. பதின்மூன்று பிள்ளைகள் பிறந்த வீட்டின், தலைச்சன் பெண் பிள்ளையான உனது கையிலிருந்த புத்தகப்பை எப்படிப் பிடுங்கி எறியப்பட்டது என்றும், ஒவ்வொரு குழந்தையையும் பெற்ற பிறகு வளர்க்கும் பொறுப்பை உன்னிடம் (நீ குழந்தை என்பதை அறியாமல்) தந்துவிட்டு அடுத்த குழந்தையை வயிற்றில் சுமக்க ஆரம்பிக்கும் அம்மாவைப் பற்றியும், குழந்தை பெறுவது அல்லா தரும் பரக்கத் - அதைத் தடுப்பதும் அழிப்பதும் ஹராம் என்று போதித்த உன் தந்தையைப் பற்றியும் நீ நிறைய

சொல்லியிருக்கிறாய். உனது சகோதர சகோதரிகளைக் கையிலும் இடுப்பிலும் ஏந்தியபடி நீ தெருக்கள்தோறும் திரிந்ததையும் உழைப்பையும் நீ சொல்லும் உனது குழந்தைப் பருவத்தை நீ தொலைத்ததை நீயே அறிந்திருக்காமல் சொல்வாய். அக்கதைகளை நீ சொல்வதற்கான காரணங்கள் பெரிதாக ஒன்றும் இருக்காது. என்னிடமிருந்து கருணையைப் பெற வேண்டும் என்கிற எண்ணமும் இருக்காது. ஏதேனும் வேறொரு சந்தர்ப்பத்தில் எதையோ சொல்ல வேண்டிய தருணத்தில் உன் குழந்தைப் பருவ செய்திகளும் உன் நினைவுகளில் இருந்து வெளிப்படும்.

அவர்கள் ஒவ்வொருவரும் என்னமாதிரி விளையாட்டுக் காட்டினால் உணவு ஊட்டுவது சுலபமாக இருக்கும் என்பதையும் எந்தக் குழந்தைக்கு என்ன விளையாட்டு பிடிக்கும் என்பதையும், யார் யாருக்குக் காய்ச்சல் வந்து கஷ்டப்பட்டாய். யார் யாருக்கு...

அதன் வேதனையிலும் நீ எவ்வாறு கஷ்டப்பட்டாய் என்பதையும், எந்தக் குழந்தை கீழே விழுந்து காலில் கையில் மண்டையில் காயத்தோடு வந்து உன்னைச் சிரமப்படுத்தியது,

சமையல் செய்ய எப்படிக் கற்றுக் கொண்டாய் என்றும் பல சந்தர்ப்பங்களில் வெவ்வேறு தருணங்களில் விளையாட்டாக, வேடிக்கையாக, சுவாரஸ்யமான கதைகளாக நீ நினைவுகூரும்போதெல்லாம் முடிவாக அவர்களெல்லாம் உன்னை இப்போது பொருட்படுத்துவதில்லை என்றும், நம் வீட்டுக் குழந்தை அடுத்த வீட்டுக் குழந்தைகளோடு சண்டையிட்டு வந்தால் அந்தக் குழந்தைகளின் பெற்றோருக்குச் சமாதானம் சொல்லியதையும், அவர்களைப் பள்ளிக்கூடத்தில் விட்டுவிட்டு வருவதற்கு எப்படியெல்லாம் சிரமம்பட்டாய், எப்படி மிட்டாய் கொடுத்து பள்ளியில் விட்டுவருவாய் என்பதையும், இதனூடே சோறு வடிக்கவும்...

உனக்குக் குழந்தைப் பருவம் வாய்க்கவில்லை என்று வருந்துவதற்கு அருகதை எனக்கும் இல்லை என்றுதான் நினைக்கிறேன். உன்னுடையதைவிட கொஞ்சம் மேல் என்னுடையது, அவ்வளவுதான். மற்றபடி அருமையான ஒன்று என்று சொல்லிக்கொள்ள முடியாது. நீ விரும்பியதும் எனக்கு நல்லதொரு குழந்தைப் பருவத்தைத் தர வேண்டும் என்பதுதான். ஆனால் இந்தச் சமூகத்தில் குழந்தைப் பருவத்தைத் தாய் நினைத்து வழங்கிவிட முடியாது, சமூகம்தான் வழங்க முடியும் என்பதைத் துரதிர்ஷ்டவசமாக நான் அறிவேன், நீயும் அறிவாய்.

அம்மா நீதான் எத்தனை அழகு. ஒருமுறை நீ மீன் கழுவிக்கொண்டிருந்தபோது என்னைப் பெயர் சொல்லிக்கூப்பிட்டு இதைப் பாரேன் என்று பெரிய விரால்மீன் வயிற்றில் இருந்த வேறொரு குட்டி மீன் ஒன்றைக் காட்டினாய். நான் அதை விரிந்த கண்களுடன் பார்த்தபொழுது எனக்கு முன்பிருந்த உன் முகம் எனக்கு இன்றும் நினைவிருக்கிறது. நிஜமாகவே வில்லைப்போல வளைந்த புருவங்களுக்குக் கீழாக விரிந்த பெரிய அழகிய பழுப்பு நிறக் கண்கள். நீள்வட்ட முகம். சிவந்த உதடுகள். குழந்தைத் தன்மை நிரம்பிய அம்முகத்தையும் அதன் அழகையும் நான் சாகும்வரை என் மனதில் இருத்திவைத்துக்கொள்ள விரும்புகிறேன் அம்மா.

உனது இதே அழகுதான் என்னைப் பல வருடங்களுக்குப் பிறகு என் இளமைப்பருவத்தில் உன்னோடு ஒப்பிட்டுக் கண்ணாடி முன்பாக வருத்தப்பட வைத்திருக்கிறது. நான் உன்னைப்போல அழகில்லை. நிறமும் இல்லை. அழகும் நிறமும் பெண்ணுக்கு அவசியம் என்கிற சமூகத்தில் வளர்ந்தேன் இல்லையா? எனக்கு அப்பாவைப் போல விரிந்த சற்று அகன்ற முகம். தவளையைப்போல பெரிய மூக்கு. அது ஒன்றும் அத்தனை அழகல்ல.

வயதில் கழுதைகூட அழகு என்பார்களே, அதனால் ஓரளவு பார்க்கும்படி இருக்கிறேன். முதுமையில் உன்னைப்போல அழகாக இருக்க மாட்டேன் எனத் தெரியும். அது உனக்கும் தெரிந்துதான் இருந்தது. உனக்கு அதில் வருத்தமும்கூட. அதனால்தான் நான் எப்போதெல்லாம் தெருவிலிருந்து வீட்டிற்குள் நுழைகிறேனோ அப்போதெல்லாம் நீ, "உன் முகம் கறுத்துக் கிடக்கிறது பார். சோப்புப் போட்டு நன்றாக கழுவிப் பவுடர் போட்டுக்கொள், பொம்பளைப் பிள்ளைக்கு நிறம் முக்கியம்," என்று சொல்வாய்.

பெண் பிள்ளைகளுக்கு மூக்கு குத்துவதும் காது குத்துவதும் அதற்கு விருந்து போட்டு நன்னி வீட்டுச் சீர் வாங்குவதும் 11 வயதிற்குள் பிரமாதமாக நடக்கும் விழா. எனக்கும் காது, மூக்கு குத்த ஏற்பாடு நடந்தபோது நீ ஒரு விஷயத்தில் உறுதியாக இருந்தாய்; என் பெண்ணுக்கு மூக்குக் குத்தக் கூடாது என்று. ஊரில் பெண் குழந்தைகள் மூக்குக் குத்திக்கொள்வதும் மூக்குத்தி அணிவதும் காலம்காலமாக நடந்துகொண்டிருந்தபோது நீ பிடிவாதமாக இருந்தாய். நானும் என் தோழிகள் எல்லோரும் மூக்குத்தி அணிந்திருப்பதைப் பார்த்துப் பெரும் ஆசையோடுதான் இருந்தேன். உனக்கு அது பிடிக்கவில்லை என்றதற்காக நான் மூக்குத்தி அணியும் வாய்ப்பினை என் வாழ்வில் இழந்துவிட்டேன் என்கிற ஆதங்கமும் விரோதமும் உன் மீதுப் பல ஆண்டு காலமாக இருந்திருக்கிறது. ஊரில் மூக்கை மொட்டையாக விட்டிருந்த, மூக்கை முத்தவிட்டுவிட்ட என் மீதும் அதை எனக்குச் சாத்தியமாக்கிய உன்மீதும் கடுமையான ஏளனமும் விமர்சனமும் வந்தபோதெல்லாம் துவண்டுபோயிருக்கிறேன்.

ஆனால், நீ அதை மட்டும் பொருட்படுத்தியதேயில்லை. பிறகொரு நாள் நன்றாக வளர்ந்து நான் சிந்திக்கும் பக்குவம் வந்தபிறகு அதற்கான காரணத்தை நீயாகவே என்னிடம் சொன்னாய். மூக்குத்தி அணியும் முகம் எந்த அளவிற்குத் தனி அழகை பெருகிறது என்றும், அதோடு பார்த்தே பழகிவிட்ட பிறகு கணவன் இறந்து விட்டால் நிரந்தரமாக கழட்டப்படுகிற மூக்குத்தியின் வெற்றிடம் எந்த அளவு முகத்தை களையிழக்கச் செய்துவிடும் என்பதையும், பிறகு என்றுமே அணிய முடியாத அந்த அணிகலன் என்றென்றைக்குமாக விதவை என்பதை நினைவூட்டும் ஒன்றாக மாறி விடுகிறது என்பதையும் சொன்னாய். நிச்சயமாக நான் இன்றைக்கும் அணிந்திராத மூக்குத்தி சரியானதொரு காரணத்தோடு தவிர்க்கப்பட்டுவிட்டதொரு அணிகலனாகப் புரிந்துகொள்கிறேன். அதற்காக உனக்கு நன்றி சொல்லவும் விரும்புகிறேன்.

சில நாட்களுக்கு முன் அடுத்த வீட்டில் பரிதாவின் கணவர் இறந்தபிறகு மூக்குத்தியைக் கழற்றிய அவளது முகம் நிஜமாகவே இழப்பின் கொடூரத்தினை உணர்த்தக் கூடியதாக இருந்தது என்பதைப் பார்த்து மனதிற்குள் நிம்மதிகொண்டேன். நான் கணவனை இழந்துவிட நேர்ந்தால் மூக்குத்தி தருகிற வெற்றிடத்தின் சுமையை எனக்கு நீ தரவில்லை.

அம்மா உனக்கு ஞாபகம் இருக்கிறதா, நீ எப்போதெல்லாம் அத்தாவினால் கடும் வசவுக்கு ஆட்படுவாயோ அப்பொழுதெல்லாம் நான் எப்படி மனம் நொறுங்கிப்போய் அழுதிருக்கிறேன் என்று? கோபத்தில் கணக்கில்லாதபடி அவர் உடைத்திருக்கும் மண்பாண்டங்கள் அனைத்துமே அவரது முதல் மனைவிக்கு சீதனமாக வந்தவை. அண்ணன் கோபக்காரனாக பிற்காலத்தில் உணரும்போதெல்லாம், அவன் என்ன மாதிரி மனைவியிடம் நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கும் நான் திருமணம் செய்துகொள்ளக் கூடாது என்று நினைத்துக்கொண்டதற்கும் அத்தருணங்களே முக்கியமானவையாக இருந்திருக்கின்றன. ஒரு பாத்திரத்தை உடைத்துவிட்டுப் போய்விடுவது, வீட்டின் கடைசி மூலைமுடுக்குவரை அதன் சில்லு கிடக்கிறதா எனத் தேடித்தேடிச் சுத்தம் செய்யும் வேலையை நீதான் எப்போதும் செய்துகொண்டிருப்பாய்.

அத்தாவுக்குப் பிடித்தமான உணவுகளையும் அவருக்கு விருப்பமான சுவையையும் அவர் ஊரில் இருந்தால் மட்டும்தான் சமைக்க வேண்டும் என்று நீ திட்டங்களை வைத்திருப்பாய். அவருக்குப் பிடிக்காத மத்தி மீன் உனக்கும் பிள்ளைகளுக்கும் விருப்பமானதென்றாலும் நீ சமைக்க மாட்டாய். தெருவில் மீன் விற்கும் ஆட்கள் கூடைகூடையாக மத்தி மீனைச் சுமந்து திரிந்து கூவினாலும், நாங்கள் உன்னிடம் வந்து

கெஞ்சினாலும் நீ வாங்கிச் சமைக்கவே மாட்டாய். அவருக்கு விருப்பமானபடி நடப்பதை மட்டுமே உன் வாழ்க்கை முழுவதும் செய்துகொண்டிருந்தாய்.

நிச்சயமாக உனக்கு நினைவிருக்கும், எனக்குத் திருமணம் வேண்டவே வேண்டாம் என்று ஒரு நாள் மறுத்ததற்குக் காரணமாக உன்னையும் அத்தாவையும்தான் சொன்னேன். அதற்கு நீ என்னைக் கடுமையாகக் கடிந்துகொண்டாய். உனக்கென்ன தெரியும் எங்கள் உறவைப்பற்றி என்று. அது நிச்சயாக என்னைச் சமாதானம் செய்ய நீ சொன்ன வார்த்தைதான். அதில் நம் இருவருக்குமே குழப்பமும் சந்தேகமும் இல்லை. ஆனால் அதன்பிறகு நீ மிகுந்த ஜாக்கிரதையாக நடந்துகொள்ள முற்பட்டதையும் நான் அவதானித்தேன் தெரியுமா?

அத்தாவிடம் ஏதேனும் திட்டு வாங்க நேரும் முன்பாக நீ அதனைத் தவிர்க்கும் விதங்களில் நடந்துகொள்ள ஆரம்பித்தாய். குறிப்பாக அத்தா வீட்டிற்குள் நுழையும்போது நீ தொழுதுகொண்டிருக்கக் கூடாது அல்லது டி.வி. பார்த்துக்கொண்டிருக்கக் கூடாது. அப்படி நடந்தால் உனக்குக் கடுமையான திட்டு கிடைக்கும். இது வழமையாக நடக்கும். நீயும் அதற்குப் பழக்கப்பட்டுவிட்டாய்.

நான் திருமணம் வேண்டாம் என்று மறுத்தபிறகு அந்த நாளிலிருந்து நீ இந்த விஷயங்களை மிகக் கவனமாகத் தவிர்த்தாய். அத்தாவிற்கே பிறகு வந்த நாட்கள் ஆச்சர்யம் தரக் கூடியதாக இருந்திருக்கும். அதில் எனக்குச் சந்தேகமில்லை. அவர் வரும் நேரத்தில் நீ அவர் வருகைக்காகக் காத்திருப்பாய். திருமண உறவின் மீது எனக்கு ஏற்பட்ட சகல அவநம்பிக்கைகளையும் விரோதத்தினையும் சந்தேகங்களையும் போக்குவதற்காக மிகச் சிறப்பாக அரங்கேற்றப்பட்ட நாடகம். இதுதான் எனக்கு இன்னும்கூட திருமணத்தின் மீது வெறுப்பினை உண்டாக்குவதாக மாறிற்று என்பதை நீ அறிய மாட்டாய்.

உனக்கு இந்தக் கடிதத்தை ஏன் எழுதுகிறேன் தெரியுமா? என்னுடைய கோபம் உன் மீதான கோபமாகவும் வெறுப்பாகவும் மாறுகிறதோ? உன் மீதான எல்லையற்ற பிரியம் குறைகிறதோ என்கிற கவலையினால்தான் இக்கடிதத்தை எழுதுகிறேன்.

உன் மீது அப்படியான வெறுப்போ பிரியத்தில் குறைபாடோ வரும் பட்சத்தில் நான் உயிரோடிருக்கக்கூட விரும்பமாட்டேன், தெரியுமா?

நான் உன்னிடம் கேட்க வேண்டிய கேள்விகள் எத்தனையோ இருந்தாலும் கேட்காமலிருப்பதற்குக் காரணம் அதிலுள்ள நியாயங்கள் உன் மனதை ரணப்படுத்தி விடுமோ என்கிற அச்சத்தினால்தான்.

அப்போது எனக்குப் பத்து வயதிருக்கும். நம் பக்கத்து வீட்டிற்கு மருமகளாக வந்த உன் வயதையொத்த பட்டணத்துப் படித்த மருமகள் தினமும் சாயங்கால நேரத்தில் பொழுதுபோகவில்லை என்று சொல்லி நம் வீட்டிற்கு வந்து அமர்ந்திருக்கும்போது நீ ரொம்பவே பதற்றமுறுவதை நான் கவனித்திருக்கிறேன். அவள் ஒன்றும் உன்னைப்போல அழகில்லைதான். எப்போதும் நான் உங்களிருவரையும் ஒப்பிட்டுப்பார்த்து சந்தோஷப்பட்டுக்கொள்வேன். நீயோ அவள் அவ்வப்போது சொல்லும் ஆங்கில

வார்த்தைகளோடும் நீண்ட நகங்களில் அவள் பூசியிருக்கும் நெயில் பாலிஷின் வண்ணங்களோடும் உடுத்தியிருக்கும் கஞ்சி போட்டு மொடமொடக்கும் காட்டன் புடவைகளோடும் தடுமாறிக்கொண்டிருப்பதை நான் கவனிக்காமல் இருந்ததேயில்லை என்பதை நீ அறிவாயா?

ஒன்று தெரியுமா, நீ அவள் இருக்கும்போது ஒருசில நிமிடங்களேனும் ஏதேனும் வாரப்பத்திரிகையைக் கையிலெடுத்துக்கொண்டு பிறர் முன்பாகப் படிப்பதுபோல பாவனை செய்துகொண்டு படம் பார்த்துக் கொண்டிருக்கும் தருணங்களிலெல்லாம், நான் இந்தச் சமூகத்தைப் பழிவாங்கத் துடித்திருக்கிறேன் அம்மா. உனக்கு படிப்பைத் தருவதற்கு யோக்யதை அற்ற சமூகம் நாசமாகப் போகட்டும் என்று சபித்திருக்கிறேன்.

உனக்கு உன் கிராமத்து வாழ்க்கையில் இதெல்லாம் கிடைக்காமல் போனது உன்னுடைய குற்றம் என்பதுபோல உன் பதற்றங்கள் இருக்கும். உன் பதற்றங்கள் ஏதும் புரியாமல் அவள் தினமும் நம் வீட்டிற்கு வருவதை நான் தடுக்க விரும்பியிருக்கிறேன். ஆனால், காரணங்களற்று அவளைத் தடுப்பதற்கு என்னிடமும் அதிகாரம் ஏதுமில்லை. உன்னைப்போலவே பெண்பிள்ளையின் மீதான அப்பாவின் விருப்பமின்மையை அதன் சாயலை என்மீது படவியலாதபடிக்கு எப்படியெல்லாம் என்னைப் பாதுகாத்தாய் என்பதை நான் அறிவேன். அவர் தனது ஆண் பிள்ளைகளுக்குத் தருகிற எந்த ஒன்றையும் எனக்குத்தர விரும்பியதில்லை என்பதை நான் அறிவேன்; இதை நீ அறிந்திருக்கவில்லை. அந்த பாரபட்சத்தை நீ உன் அன்பினால் சமன் செய்துவிட்டதாக நம்பிக்கொண்டிருந்தாய். ஆண்பிள்ளைகளை வாரிசுகளாக நம்பிக்கொண்டிருந்த அந்தச் சமூகத்திடமிருந்து எனது தந்தையைப் பிரித்துக்கொள்ள இயலாது என்பதும் எனக்குப் புரியும்.

இருந்தாலும் பெண்பிள்ளைகள் எப்போதுமே அம்மாவோடு இருப்பவர்கள், முரண்படாதபடிக்கு என்ற என் நம்பிக்கையை நான் இழக்க ஆரம்பித்தது எப்போதிலிருந்து என்று பலமுறை யோசிக்க விரும்பியிருந்தாலும், அண்ணி ஷர்மிளாவை நீ காரணம் ஏதும் இல்லாமலேயே ஒரு நாள் கடுமையாகக் கடித்துக் கொண்டபோதுதான்.

அவருக்குத் தெரியாது நம் வீட்டில் ஆண்கள்தான் முதலில் சாப்பிட வேண்டும் என்று நீ விரும்புவாய் என. (நான் மட்டும் விதிவிலக்கு உன் மகள் என்பதால்) அத்தாவும் அண்ணன்களும் வருவதற்கு முன்பாக நான் சாப்பிடுவதைப் பார்த்தவள், தனக்குப் பசிப்பதாகச் சொல்லி அவளும் சாப்பிட்டதுதான் உனக்கு மிகப்பெரிய ஆத்திரத்தை

உண்டாக்கிற்று. இத்தனைக்கும் அவள் ஒன்றும் நம்மைவிட வசதி குறைந்த வீட்டுப் பெண் இல்லை. என்னைப்போல என் வயதை ஓரளவுக்கு ஒத்த ஒரு பெண்தான். நீ எனக்கு இவ்வீட்டில் வழங்குகிற எல்லாச் சலுகைகளையும் உரிமைகளையும் அவள் தனது வீட்டில் பெற்றிருந்தவள்தான். சற்று கூடுதலாகக்கூடப் பெற்றிருக்கலாமே தவிர குறைவாக இருந்திருக்காது என்பது உனக்கும் தெரியும் என்னைவிட என்றாலும், இங்கே அவள் ஒரு மருமகளாக நடந்துகொள்ள வேண்டும் என்பது எல்லா மாமியார்களின் எதிர்பார்ப்பாகத்தான் இருக்கும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. ஆனால் சிறிய விஷயத்திற்காக (இது நிஜமாகவே சிறிய விஷயம் என்றுதான் நான் புரிந்துகொண்டிருக்கிறேன்) நீ அவளிடம் நடந்துகொண்ட முறை, காட்டிய வெறுப்பு நான் உன்னிடம் அறியாத புதிய ஒன்று. உனக்கு இன்னொரு முகம் இத்தனை கொடூரமானதாக இருக்கும் என்பதை நான் முதன்முதலாகப் பார்த்து பயந்து போனேன்.

ஒருமுறை அன்சாரியின் அம்மா என் மாமியார், வீட்டில் சமைத்திருந்த பிரியாணியை எனக்குத் தரவில்லை என்பதற்காக நீ எவ்வளவு ஆத்திரத்தின் உச்சிக்கே சென்றாய் என்பதை இந்தச் சமயத்தில் நினைவூட்டிக்கொள்கிறேன். அது ஒன்றும் வேண்டுமென்றே செய்த விஷயமல்ல. அன்றைக்கு வீட்டிற்கு வந்திருந்த விருந்தினர்கள் கூடிப்போனதால் வீட்டிலிருந்த பெண்களில் யாருக்கும் பிரியாணி மிச்சமில்லை. ஆனால், இதை நீ அவ்வளவு பெரிய விஷயமாக எடுத்துக்கொண்டு மருமகளைச் சரியாக நடத்தாத கேடுகெட்டவளாக என் மாமியாரை என் கணவரின் முன்பாகவே சபித்தாய். நான் யதார்த்தமாக பகிர்ந்துகொண்ட விஷயத்தை நீ எவ்வளவு தீவிரமான பிரச்சனையாக மாற்றியிருந்தாய் அன்று. அன்சாரியின் முகம் என்னை எத்தனை வெறுப்போடு எதிர்கொண்டது என்பது உனக்குத் தெரியுமா? நான் அவமானத்தினால் சுருங்கிப்போய்விட்டேன். நீ எத்தனை மிருதுவான ஒருத்தி என்பதையும், என் தந்தை உன்னிடம் நடந்துகொண்ட முறைகளையும் தொடர்ந்து கவனித்து வந்தவள் என்கிற நிலையில், எனக்கு இன்றைய உனது செயல்பாடுகளின் மீது ஆச்சர்யம் உண்டாகினாலும் அதனை வேறொரு தளத்தில் வைத்துப் புரிந்துகொள்ளவும் முயற்சித்தபடிதான் இருந்தேன். என்றாலும், அவ்வப்போது தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் நான் உன்னை எனது மாமியாரோடு ஒப்பிட்டுப்பார்த்து மனம் வருந்திக்கொள்வேன். அது அத்தனை உவப்பான ஒப்பீடாக இருக்காது என்பதனால் பலமுறை மிகுந்த மன அயர்ச்சிக்குள்ளாகியிருக்கிறேன்.

பெற்ற அம்மாவை மாமியாரோடு ஒப்பீடு செய்து பார்க்கிற நிலைமையை நீதான் உருவாக்கினாய். அதுவே எனக்கு எத்தனை பெரிய துன்பத்தைத் தந்திருக்கும் என்பது உனக்குத் தெரியுமா?

அன்சாரி நல்ல கணவனாக இருக்க முயன்றாலும், அவனுடைய குடிப்பழக்கம் மட்டும் எங்களுக்கிடையேயான இடைவெளியை உருவாக்கியபோது நீ உன் மருமகனை, மருமகன் என்றுகூடப் பாராமல் எத்தனை மோசமாகத் திட்டியிருக்கிறாய்? நேரடியாக என்றில்லாமல் ஒளிவு மறைவாக அவனது காதில்படும்படி ஏதேனும் சொல்லாமல் நீ இருந்ததேயில்லை. அதற்குப் பின்னணியில் உன் மகளின் எதிர்காலம் குறித்த உனது பயம் இருந்ததை நான் அறிவேன் என்றாலும் குடிப்பதனால் மட்டுமே அன்சாரியை கெட்டவனாகவோ என்னை நேசிக்காதவனாகவோ நான் குறுக்கிக் காட்டிய பிம்பமாக மாற்றியதில்லை. அவனுக்கு என் மீதான நேசம் அளவிட இயலாதது. என்னை மகிழ்விப்பதற்கான காரியங்களை எப்போதும் அவன் நிறுத்தியதில்லை. அவனது அம்மாவிற்குத் தெரிந்தும் தெரியாமலும்கூட அவன் எனக்கான பொருட்களை ஆசையோடு பரிசளித்தான். எனது மாமியார் அதனை எப்போதுமே பொருட்படுத்தியதேயில்லை. எனது நாத்தனார் ஏதேனும் குறுக்கீடு செய்யும்போதோ விமர்சிக்கும்போதோ என் மாமியாரிடமிருந்து எந்த ஒரு விமர்சனமும் வந்ததேயில்லை. இந்த வயசுல இப்படித்தான் நாமளும் இருந்தோம் என்கிற தொனியை ஒரு படிப்பறிவில்லாத கிராமத்துப் பொம்பளை வெளிப்படுத்தியதைப் பார்த்து வியந்துதான் போயிருக்கிறேன்.

அப்போதெல்லாம் நீ மாமியார் அந்தஸ்தைப் பெற்றிருக்கவில்லை என்பதனால் ஒப்பிட்டுப் பார்க்கும் சந்தர்ப்பங்களும் வாய்க்கவில்லை. ஆனால் இன்று நான் ஒப்பீடுகளை நிகழ்த்துவதில் கை தேர்ந்தவளாக மாறிவிட்டேன்.

அன்று தீபாவளி. அன்சாரி தனது இந்து நண்பர்கள் சிலர் தந்த விருந்தில் மதுவும் அருந்திவிட்டு இரவு வீட்டிற்கு வந்ததற்கு நீ உன் மகளின் வாழ்க்கை வீணாகிப்போய்விட்டதாக நடுவீட்டில் ஒப்பாரிவைத்து அவனை அவமானப்படுத்தியதும் இன்று நினைவுக்கு வருவதற்கு நேற்றைய நிகழ்ச்சி காரணமாக இருக்கிறது தெரியுமா?

உனக்கே தெரியும் உன் மகன், எனது அண்ணன் கூட மதுப்பழக்கத்தில் எந்த அளவு பலவீனமானவன் என்பது. நமது தோட்டத்தில் கூலி வேலைக்கு வரும் பெண்களிடம்

தொடர்புகளை வைத்திருந்தான் என்பதும் அந்த விஷயங்களை மறைத்து நீ உன்மகனுக்கு மணம் முடித்ததும் இன்றும்கூட அவனது தொடர்புகள் நீடிப்பதும் உனக்குத் தெரியும். என்றாலும், இதன் காரணமாக ஷர்மிளா அண்ணனோடு பிணங்கும் சமயங்களில் 'ஆமா ஆம்பளன்னா அப்படி இப்படிதான் இருப்பான், ரொம்பத்தான் ஆடுறா' என்று மருமகளையே குறைசொல்வாய் தெரியுமா, அன்றுதான் எனக்கு முதன்முறையாக வெறுப்பின் நிறம் உன்மீது படிய ஆரம்பித்தது.

என்றாலும், நான் இந்த விஷயத்தை மகனை விட்டுக்கொடுக்க விரும்பாத தாயின் நிலையிலிருந்து புரிந்துகொள்ளவே எத்தனித்தேன். அது எனது வெறுப்பின் வீரியத்தைக் குறைக்க வழிசெய்யும் என்கிற நம்பிக்கையை நான் பெற்றிருந்தேன். உன்மீது எனக்குக் கசப்போ வெறுப்போ தோன்றும் சமயங்களில் எல்லாம், நான் அதிலிருந்து வெளியேற எனக்குள் நினைவூட்டிக்கொள்கிற விஷயம் நீ எனக்குத் தர விரும்பிய குழந்தைப் பருவம்தான்.

அன்புள்ள அம்மா உனக்குத் தெரியுமா, நீ அண்ணனிடம் எப்படியெல்லாம் அவனது மனைவியைப் பற்றிய கசப்பினை உருவாக்க முயற்சிப்பாய் என்று. அவள் உடுத்தும் சேலையின் மெல்லிசு குறித்து, அவள் தலையில் முக்காடிடாதது பற்றி, கடைப் பையன்கள் முன்பாக பவுடரும் லிப்ஸ்டிக்கும் பூசிய முகத்தோடு நின்று பேசிக்கொண்டிருப்பது குறித்து. அவளது ஒவ்வொரு செயலுக்கும் ஒரு விமர்சனத்தை உருவாக்கி உன் மகனின் மண்டையில் போகிறபோக்கில் ஓரிரு வார்த்தைகளில் பதிய வைத்திடும் சாமர்த்தியத்தை எங்கிருந்து கற்றாய்? அந்த சாமர்த்தியங்களில் எதையும் நீ அத்தாவிடம் காட்டியதை நான் பார்த்ததேயில்லை. இத்தகைய சாமர்த்தியங்கள் உனக்குள்ளாகப் பதுங்கியே இத்தனை ஆண்டுகள் இருந்ததா? வெளிப்படுகிற சந்தர்ப்பங்கள் எதிர்பார்த்து என்னை வியப்பிலேயே ஆழ்த்திவிடுபவை அவை.

நீ இதே சாமர்த்தியத்தை எப்போதேனும் உன் கணவனிடம் காட்டியிருந்தாய் என்றால் சந்தோஷப்பட்டிருக்கும் முதலாவது நபர் நானாகத்தான் இருந்திருப்பேன், என்ன செய்வது?

உன் மீதான எனது வெறுப்பு அல்லது அன்பின்மை, உணவுப் பதார்த்தம் கெட்டுப்போகும்போது பூக்கும் சாம்பல் நிறம்போல மிக மெதுவாகச் சாம்பல் நிறம் பூணுகிறது.

உனது கணவர் உனக்குச் செய்த எல்லாத் துரோகங்களையும் சிறு கசப்புடன் நீ கடந்துசென்ற பல சந்தர்ப்பங்களை நான் இயலாமையுடன் கவனித்திருக்கிறேன். அவரது அடக்குமுறைகளை, அச்சுறுத்தல்களை, அவமதிப்புகளை நீ கடந்து சென்றதற்கும் துரோகங்களைக் கடந்து சென்றதற்கும் இடையே கொஞ்சமேனும் முரண்பாடு அல்லது வித்தியாசத்தை நான் எதிர்பார்த்திருந்தேன்.

அத்தாவும் நீயும் அன்யோன்யமாக இருந்ததேயில்லை. அவரது ஆதிக்கத்திற்குள் ஒடுங்கியே உன்னை நானும் அண்ணன்களும் பார்த்து வந்திருக்கிறோம். அதனாலேயே நாங்கள் அத்தாவின்மீது கோபத்தையும் உன் மீதான அன்பையும் பலப்படுத்தி வந்திருக்கிறோம். அவர் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் தனது பொறுமையை உன்னிடம் காட்டுவார் என்கிற நம்பிக்கையை உன்னோடு நாங்கள் பெற்றிருந்தோம். ஆனால், எங்களது குழந்தைப் பருவமும் இளமைப் பருவமும் முடிந்த பிறகும்கூட அப்படியொரு விஷயத்தை நாங்கள் பார்க்கவில்லை.

ஏதேனும் ஒருவகையில் நீ அவரிடம் உன் எதிர்ப்பைக் காட்ட வேண்டும் என்று நாங்கள் விரும்பியிருக்கிறோம். ஆனால் அப்படி ஒரு விஷயம்

நடக்கவில்லை. கோபம், முரண்பாடு என்று ஏதேனும் ஒன்றை உன்னிடம் நாங்கள் எதிர்பார்த்திருந்தோம். ஒரு சராசரிப் பெண்ணிற்கு இருக்கக்கூடிய இவ்விஷயங்கள் கூட உன்னிடம் காண முடியாத ஆச்சர்யத்தை நாங்கள் பல வருடங்கள் கடந்தும் கூட யோசித்து வந்திருக்கிறோம், உன் மீதான ஆதங்கத்தோடு.

ஆனால், எங்களுக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை, நீ ஒருவிதத்தில் உன் கோபத்தை வெளிப்படுத்தினாய் என்பதும் திருப்பி அடித்தாய் என்பதும். அப்போதே அது தெரிந்திருந்தால் உன் பிள்ளைகள் உன்னிடம் எப்படி நடந்துகொண்டிருப்பார்கள் என்ன நினைத்திருப்பார்கள்? ஆனால் நான் ரொம்பவும் சந்தோஷமாக இருந்திருப்பேன்.

இவ்வளவு காலம் இல்லாமல் இன்று உன்மீதான கோபத்திற்கு ஒரு சம்பவம் காரணமாக அமைந்தது உண்மைதான். ஆனால் இந்தக் கோபம் ஒரே நாளில் உண்டாகியது என்று நான் சொல்லமாட்டேன். பல்வேறு நாட்களில் ஒருசில சம்பவங்களின் வழியே என்னுள்ளே சன்னம்சன்னமாக உருவான ஒன்றாகத்தான் நான் புரிந்து வைத்திருக்கிறேன்.

ஷர்மிளா வீட்டு வேலைகள் அத்தனையும் மாடுபோல பார்ப்பாள். உன் வார்த்தையில் ‘மாடுபோல’ என்பதைப் பலமுறை நீயே சொல்லியிருக்கிறாய் என்னிடம். ஒரே ஒரு பிரச்சனை வீட்டையும் அடுப்படியையும் காயலான் கடைபோல பரப்பிப் போட்டுக்கொள்வாள். உடனுக்குடனே சுத்தம்செய்து கொள்ளத் தெரியாது. இது எனக்கு எப்போதுமே பெரிய விஷயமாக இருந்ததில்லை. காரணம், நானே அப்படித்தான்; என் மாமியாரால் அவ்வப்போது குத்திக்காட்டப்பட்டிருக்கிறேன். ஆனால், உனக்கு இது பூதாகரமான விசயம். யாராவது வீட்டிற்கு வந்தார்களென்றால், அவர்களை மெனக்கெட்டு அடுப்படிக்கு அழைத்துச்சென்று அடுப்படியின் அலங்கோலத்தன்மையைச் சுட்டிக்காட்டி உன்னோடு ஒப்பீடு நிகழ்த்திக் காட்டுவாய்.

எனக்கு இது எவ்வளவு தூரம் வெறுப்பின் அளவைக் கூட்ட போதுமானதாய் இருந்திருக்கிறது தெரியுமா?

நம் வீட்டின் நிகழ்வுகளைப் பிறரிடத்தில் காட்சிப் பொருளாக மாற்றுவதற்கு உனக்கு எப்படி மனம் வருகிறது? நிஜமாகவே எனக்குப் புரியவில்லை. நம்வீட்டுச் சமையலறை விவகாரங்கள் ஊர் முழுக்க போக வேண்டியதன் அவசியமென்ன?

உனது மருமகள்மீது மாமியாராக நீ நிகழ்த்திக் காட்டிய இத்தகைய காரியங்களை நமது குடும்பச் சமூக அமைப்புகளின் நீடித்த பிரச்சனையாக எனக்கும் தெரியும்தானே. அதனால் இதில் பொருட்படுத்துவதற்கான அவசியம் எதுவும் பெரிதாக இல்லை என்று நம்பினேன்.

ஆனாலும், இப்பிரச்சனைகளுக்குள் நான் எப்போதுமே வர விரும்பியதில்லை. யாராவது ஒருவரை ஆதரித்துப் பேசினாலும் இன்னொருவரது வருத்தத்தை அடைய நேரிடும் என்பதனால் துரதிர்ஷ்டவசமாகப் பலநேரங்களில் வருத்தப்படக்கூடிய இன்னொரு நபர் நீயாக மட்டும்தானே இருக்கப் போகிறாய் என்பதனால் நான் அப்படி இருப்பேன்.

ஒருமுறை நம்வீட்டிற்கு விருந்திற்காக நானும் அன்சாரியும் வந்திருந்தோம். எனக்குப் பிடிக்கும் என்பதற்காக நீ நிறைய ஆற்று மீன் வாங்கியிருந்தாய். எனக்குப் பிடித்த விரால் மீன். ஷர்மிளாவைச் சுத்தம் செய்வதற்காக வீட்டின் பின்புறம் இருந்த தோட்டத்திற்கு அனுப்பிவைத்தாய். அங்கே மீனை உரசிச் சுத்தம் செய்வதற்காகவே கற்களைப் பதித்து, தண்ணீர்ப் பிடிக்கும் குழாய் எல்லாம் பதித்து வைத்திருக்கிறாய். வேப்ப மரநிழல் விழும் இடத்தில், ஷர்மிளா வருவதற்கு முன்பு நீயும் நானும் வேலைக்காரம்மா சாராம்மாவும்

பேசியபடி மீன் சுத்தம் செய்வோம். இந்த முறை சாராம்மா வேலைக்கு வராத நிலையில் நீ ஷர்மிளாவைச் சுத்தம் செய்யச் சொன்னாய். அவள் சிறுத்த முகத்துடன் வெடுக்கென நம்மைக் கடந்து தோட்டத்துக்குப் போனாள்.

எனக்கும்கூட சுத்தம் செய்யப்போக ஆசைதான். ஆனால் உனக்குப் பயந்து அமைதியாக இருந்தேன். ஷர்மிளாவின் சிடுசிடுத்த முகம் உனக்கு கடும் சீற்றத்தை உண்டாக்கிற்று. சட்டென்று நீ எழுந்து தோட்டத்தைப் பார்க்க நடந்தாய். அங்கே போய் நின்று கொண்டு "நான் யாரு, நான் வாழ்ந்த வாழ்க்கை என்ன, என் அந்தஸ்து என்ன, நீ பார்த்து என்கிட்ட மூஞ்சிய முகத்த காட்டுற என்று உருமிவிட்டு வந்தாய்."

அது எனக்கும் காதில் விழுந்தது. மனதிற்கு ரொம்பவே கஷ்டமாக உணர்ந்தேன். அப்போதுதான் ஷர்மிளா பதிலுக்கு ஏதோ முணுமுணுத்தது உன் காதில் விழுந்தது. என் காதிலும்தான். ஒரே வார்த்தை, "ஆமாம் உங்க யோக்யதை எனக்குத் தெரியாதுதான்," உன்னைப் பார்த்து வந்து விழுந்த வார்த்தைகள். இந்த வார்த்தையின் பூடகத்தன்மை எனக்குப் புரியாததனால் சற்று மனவருத்தத்துடன் அமர்ந்திருந்தேன். ஆனால் நீயோ கடும் கோபத்திற்கும் மன உலைச்சலுக்கும் ஆட்பட்டாய். அதை அந்த ஒரு கணத்தில் என்னால் பார்க்க முடிந்தது.

ஏனோ உனக்கும் அவளுக்கும் மட்டும் புரிந்த மொழியில் உங்கள் உரையாடல் நடந்ததாக நான் உணர்ந்தேன். அதன் பிறகு வந்த நாட்களில்தான் நீ மாமியார் என்கிற உன் எல்லாவிதமான முஸ்தீபுகளையும் அவளிடம் பரிசீலித்துப் பார்க்க ஆரம்பித்தாய். எனக்குக் கொஞ்சம் கவலை கூடித்தான் போயிற்று, உன் நடவடிக்கைகளில் இருக்கும் கடுமைத் தன்மையைப் பார்த்து.

ஏற்கெனவே மனைவியைப் பிடிக்காமல் வாழ்ந்து கொண்டிருக்கும் அண்ணனையும் உன் ஆட்டத்தில் சேர்த்துக்கொண்டாய். ஒருவேளை அத்தா உயிரோடிருந்திருந்தால் உனக்கு இவ்வளவு கோபமும் வெறுப்பும் வந்திருக்காதோ என்று யோசிப்பேன்.

உன் ஒட்டுமொத்த கவனத்தையும் அவரைச் சுற்றி நீ வைத்திருந்தே ஆகவேண்டிய கட்டாயத்தில் இருந்திருப்பாய். அவரைச் சமாளிப்பதற்கும் அவரது வேலைகளைக் கவனிப்பதற்குமே உன் நேரங்கள் சரியாக இருந்திருக்கும். உன் மருமகள் என்ன செய்துகொண்டிருக்கிறாள் என்பதைக் குறைசொல்வதற்கான ஒரு தருணம், நிமிடம் ஏதும்

இருந்திருக்காது. அல்லது நீயே சொன்னதுபோல வயதான காலத்தில் உங்களுக்குள்ளான பிரியமும் நேசமும் ஒருவரை ஒருவர் ஆற்றுப்படுத்துவதற்கு உதவியிருக்குமோ என்னவோ. இப்போதும்கூட நான் காறித்துப்பவும் பழிவாங்கவும் நினைப்பது இந்தச் சமூகத்தை மட்டும்தான்.

உன்னைவிட இரண்டு மடங்கு மூத்த மனிதர் எப்படி உனது இறுதிக்காலம் வரைக்கும் உன்னோடு வாழ முடியும்? அதற்கான என்ன சாத்தியம் இருக்கிறது? அதற்கான ஒரு வாய்ப்பை வழங்காத இந்தச் சமூகத்தை ஏன் நாம் காறி உமிழக் கூடாது?

உன் வாழ்நாள் முழுக்க உனக்குக் கிடைத்த மன அழுத்தங்களும் உன்மீது கொட்டப்பட்ட ஆத்திரங்களும் புறக்கணிப்பும் சேர்ந்தே இன்று உன்னைத் தனித்துவமான குணாதிசயங்களை, ஆளுமையைக் கொண்டவளாக மாற்றிவிட்டதோ என்கிற கவலைதான் இன்று என்னைத் துன்புறுத்தக் கூடியதாக இருக்கிறது.

நான் உன்னைப் புரிந்துவைத்திருப்பதற்கும், நீ நடந்துகொள்வதற்கும் இடைப்பட்ட கால இடைவெளி நான் யூகித்தே இராததாக இருக்கிறது.

உனது தளர்ந்த தசைகளும் கர்ண கொடூரமாய்க் கிரீச்சிடும், மெழுகு தடவிய ஆப்பிளைப்போல பளபளக்கும் வீங்கிய முட்டியும் என்னால் உன்னைக் கண்டிக்க விடுவதில்லை. உன் உடலும் மனமும் எவ்வளவு பலவீனமாய் இருந்திருக்கின்றன என்று எனக்குத் தெரியும். நான் அவற்றைப் பார்த்தே வளர்ந்திருக்கிறேன். பரந்த நெல் களத்தில் விரிந்துகிடக்கும் நெல் பரப்புக்குள் நடந்து நீ கிளறிவிடும் அசுரவேகத்தை நான் பார்த்திருக்கிறேன். அது ஒன்றும் அவ்வளவு எளிதான காரியம் அல்ல. ஒன்றரை அடி மட்டத்திற்கு உயர்ந்துகிடக்கும் நெல்லுக்கடியில் பாதங்களைச் செலுத்தி நீ அனாயசமாகச் சுழன்று கிளறிவிடுவதை நானும் அண்ணனும் எங்களது சின்னஞ்சிறு பலம்குறைந்த பாதங்களால் செய்து பார்க்க முயன்று தோற்றிருக்கிறோம்.

உனக்கு வயதுக்கு மீறிய தளர்ச்சி எப்படியோ வந்து சேர்ந்திருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இன்றைக்குப் பத்து வயதுச் சிறுமிகள் பருவமடைந்து விடுவதைப் போல எங்களது காலம் 13, 14 வயதுவரை காத்திருக்க வேண்டியதிருக்கும். இன்றைக்கு 10 வயது பருவமடைவதை மணமுடித்துக் கொடுக்க சுலபமான வழிமுறை என்று நம் ஊரில் பெண்கள் சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் இல்லையா?

அதுபோல இதையும் நீயும் ஏற்றுக்கொள்ளத்தானே வேண்டும். சென்ற வாரத்தில் ஒருநாள் ஊரில் பக்கத்துத் தெருவில் நடந்த திருமணத்திற்கு நீ சென்றிருந்தாய். மருமகள் வந்தபிறகு இப்போதெல்லாம் நீ அத்தி பூத்தாற்போல்தான் வெளியில் செல்கிறாய்.

யாராவது உன்னிடம், மருமகள்தான் வந்துவிட்டாள் இல்லையா இனியாவது வீட்டை அவள் கையில் கொடுத்துவிட்டு நாலு இடத்துக்குப் போகவர இருக்கலாம் இல்ல, என்று சொன்னார்கள் என்றால் நீ சொல்வாய், ‘இப்போதான் எனக்கு கால்ல சங்கிலிய போட்டாப்புல இருக்கு. ஒன்னும் பொறுப்பா இருக்கிற மாதிரியே இல்ல என் மருமகளுக்கு. எல்லாம் நான்தான் கட்டி மேய்க்கிறேன். அதையும் சேர்த்து.’ என்னவோ தெருவோரத்தில் கிடக்கும் மனையை யாரோ உன் தோள்களில் மீது வைத்தாற்போலத்தான் நீ அலட்டிக்கொள்வாய். உன் முகத்தில் அப்படி ஒரு பாவனை தேங்கிக்கிடக்கும்...

அன்றைக்கு நீ ரொம்பவும்தான் அலட்டிக்கொள்வதைப் பார்த்து எனக்கு எரிச்சல் மண்டிற்று. உன்வீடு பெரிய பக்கிங்காம் அரண்மனை மாதிரியும் அதில் பார்ப்பதற்கு ஓராயிரம் விஷயங்கள் இருப்பதுபோலவும்.

இல்லை அதில் குவிந்துகிடக்கும் எண்ணற்ற விலைமதிப்பில்லாத பொருட்களை அவள் ஏதும் கடத்திப்போய்விடக் கூடாது என்பதுபோலத்தான் உன் சொல்லும் செயல்களும் இருக்கின்றன. நல்லவேளையாக என்னை என் மாமியார் இப்படி எல்லாம் கண்காணித்ததாக நினைவில்லை.

அன்று நீ அடுத்ததெரு திருமணம் நிச்சயதார்த்தம் ஒன்றிற்குப் போய்விட்டு வந்தபிறகு நீண்ட நேரம் உன் முகத்தில் ஈயாடவில்லை. கொஞ்சம் கூட ஜீவனேயற்ற முகத்தோடு திரும்பி வந்திருந்தாய். உன் முகம் தாறுமாறான எண்ண ஓட்டங்களினால் களைத்துப்போய்விட்ட ஒன்றாக இருந்தது. நீண்ட மவுனத்திற்குப் பிறகு நீ சொன்னாய், ‘அந்தப் பக்கத்து வீட்டுப் படித்த மருமகள், நீண்ட காலமாக பட்டணத்தில் வசிக்கிறவள், இன்றைக்கு இந்த நிச்சயதார்த்தத்திற்கு வந்திருந்தாள்’ என்று.

ஊரில் யாரும் பலகாலமாக அவளைப் பார்த்திருக்கவில்லை, நானும் கூட. நீ சொன்னாய் அவள் இன்றும் அப்படியே அன்று பார்த்தது போலவே இருக்கிறாள். துளி நரை கூட அற்றவளாக டக்டக்கென்று லேசான குதி செருப்புபோட்டு நடந்து வந்தாள் என்று

சொன்னாய். லேசான குதிசெருப்பு என்பதை நீ அழுத்திச் சொன்ன விதத்தில் அவளுக்கு முழங்கால் வலியேதும் இல்லை என்பதையும் லேசான என்பதன் அர்த்தம் நீண்ட குதி செருப்பு என்று ஏதும் நான் புரிந்துகொள்ளக் கூடாது என்பதாகவும் இருந்தது.

இளமையை இழப்பது அனைவருக்கும் பொதுவான ஒன்றுதான். இருந்தாலும் உன் வயதையொத்த ஒருவரிடம், உன்னைவிட அதிகமாக இளமை மிச்சமிருப்பதாக நீ கண்டுகொள்ளும்போது உனக்கு அது வருத்தத்தை உண்டாக்கத்தான் செய்யும். ஆனால் அதற்காக நீ இவ்வளவு ஆதங்கத்தைச் சுமந்து வந்தது அனாவசியமான ஒன்று என்பது என் அபிப்பிராயம்; என்றாலும் அதை நான் உன் தலைமீது சுமத்த முடியாது, செய்யவும் மாட்டேன்.

உனக்கு எப்போதும் வீடு நிறைய அக்கம் பக்கத்துப் பெண்களால் நிறைந்திருக்க வேண்டும். நீ தனித்திருப்பது என்பதையே பெரிய இம்சையாக நினைப்பாய். ஊரு முழுக்க நிறைந்திருக்கும் பெண்களுக்கு டீ தயாரித்துத் தருவது எனக்கே பிடிக்காது. ஆனால், ஷர்மியை நீ பொழுதுக்கும் வேலை வாங்கினாய். வரக்கூடிய ஒவ்வொருவருக்கும் தேநீர் போடுவது வழக்கமாக சாராம்மாவின் வேலை. ஆனால், நீ அந்த வழக்கத்தை உன் மருமகள் வந்த பிறகு வேண்டுமென்றே மாற்றி அமைத்தாய். வரும் விருந்தாளிகளின் முன்பாக எப்படி உன் மருமகளை அதிகாரம் செய்கிறாய் என்பதைப் பறைசாற்றிக்கொள்ள புத்திசாலித்தனமாக அவ்வேலையை மாற்றி அமைத்தாய்.

ஒவ்வொருவருக்கும் தனித்தனியே டீ போட்டுத்தர அவளை ஏவிக்கொண்டே இருப்பாய். இதில் ஒரு விசித்திரம் என்னவென்றால், அவர்களில் யாராவது ஒரு சிலர் சொல்லிவிட்டுப்போகும் வார்த்தைகள்தான் உன்னைத் தாளமுடியாத சித்ரவதைக்கு கொண்டுபோய்ச் சேர்க்கும்.

‘உன் மருமகள் உன்னைப்போலவே நல்ல அழகு. மாமியாருக்கு ஏத்த மாதிரி. நீ சின்ன வயசுல இருந்த மாதிரி’ என்று. அவர்கள் என்னைக்காவது உன் மகளான என்னைப் பார்த்து அப்படிச் சொன்னதேயில்லை. அப்படிச் சொல்லவும் முடியாது. அப்படிச் சொல்லியிருக்கும்பட்சத்தில் நீ மகிழ்ச்சியில் ஆழ்ந் திருப்பாய். இன்று உன் மருமகளைப் பார்த்து அப்படிச் சொல்லிவிட்டுச் சென்றால் உனக்கு எப்படி கோபமும் வெறுப்பும் வரும் என்பதை என்னால் யூகித்துப் பார்க்காமல் இருக்கவே முடியாது, இல்லையா? ஏற்கனவே வெகு சீக்கிரமே தான் வந்தடைந்துவிட்டதாக தீராத வருத்தத்தில் இருந்துகொண்டிருக்கிற

உனக்கு அவர்கள் தந்துவிட்டுச் செல்லும் வார்த்தைகள் கூடுதலான வேதனைக்கு உன்னை லகுவாக உள்ளாக்கி விடக்கூடியவையாக இருந்துவிடவே செய்கின்றன.

ஏற்கெனவே என் அண்ணனின், உன் மகனின் உன் மீதான முழுமையான அன்பில் பாதியை இழந்துவிட்டதாகத் துக்கத்தில் புழுங்கிக்கொண்டிருக்கும் உனக்கு மீதி பாதி அன்பை உன் மகனிடம் இருந்து பெறக்கூடிய, உன்னிடம் இருந்து பறித்துக் கொண்டுவிட்ட அந்த இளம் பெண்ணின் மீதான கடுமையான உன் துவேஷம் என் சின்னஞ்சிறிய இதயத்தினாலும் மூளையினாலும் கணக்கிடவோ புரிந்துகொள்ளவோ இயலாத அளவு கனத்துக் கிடக்கிறது என்றே நம்புகிறேன்.

ஒருநாள் உனது ஒன்றுவிட்ட சகோதரன் செய்துவிட்டு திரும்பியிருந்தார். நீ அவரைப் பார்க்கப் போயிருந்தாய். திரும்பி வரும்போது அவர் கொடுத்தனுப்பிய கொஞ்சம் பேரிச்சம் பழங்கள், ஜம்ஜம் தண்ணீர், முஸல்லா, தொப்பி, தஸ்பீஹ் மணி, இவற்றோடு இரண்டு கருப்பு நிற புர்காக்களைக் கொண்டுவந்து சோபாவின் மீது வைத்துவிட்டுத் தொழுவதற்கு ஒலு செய்யப்போய்விட்டாய்.

நான் என் மாமியார் வீட்டில் இருந்தேன். அடுத்தநாள் நான் வருவதற்குள் நிறைய விஷயங்கள் அந்த புர்க்காவை ஒட்டி நடந்துமுடிந்திருந்தன. அண்ணன் அந்த புர்க்கா இரண்டையும் எடுத்துப் பார்த்துவிட்டு ஷர்மிளாவிடம் ஒன்றை எடுத்துக்கொள் என்று காட்டியிருக்கிறான்.

இரண்டு புர்க்காவுமே வெள்ளை வெளிர் நீல கற்கள் பதிக்கப்பட்டு மின்னிக்கொண்டிருந்தன என்றாலும், ஒன்றில் சற்றுக் கூடுதலான வேலைப்பாடுகள் கழுத்துப் பகுதியைச் சுற்றிலும் நெக்லேஸ் அணிந்திருப்பது போல கற்கள் அதிகப்படியாகவே பதிக்கப்பட்டிருந்திருக்கின்றன. எல்லாப் பெண்களையும்போல ஷர்மிளாவும் அதைத்தான் தேர்வுசெய்து எடுத்திருக்கிறாள்.

அண்ணனுக்குத் தெரியாது இரண்டு புர்க்காவுக்கும் இடையில் உள்ள வித்தியாசம். அவனைப் பொறுத்த அளவில் அவை புர்க்காக்கள். அண்ணன் போனபிறகு நீ நடந்துகொண்ட விதமும் பேசிய பேச்சுக்களும் நம்பவே முடியாதவை என்பதை பிறகு அவள் சொல்லி அறிந்துகொண்டேன்.

ஒன்று அண்ணன் அவளிடம் தேர்வுசெய்து கொள்கிற உரிமையை வழங்கியது. இரண்டு, சிறந்த ஒன்றை அவள் நாத்தனாரான எனக்கு விட்டுத்தராமல் தனக்கென தேர்வுசெய்தது.

இரண்டும் உன்னால் ஏற்றுக்கொள்ள இயலாத விஷயங்களாக இருந்து அவளிடம் கத்தித் தீர்த்திருக்கிறாய். புர்க்காவில் என்ன நல்ல புர்க்கா கெட்ட புர்க்கா, எல்லாம் ஒன்றுதானே? என்னுடைய பயம் எல்லாம் இதுதான். உன்னுடனான எனது அந்யோன்யத்தினை இது போன்ற சின்னஞ்சிறிய விசயங்கள் கலைத்து விடக்கூடாது என்பதுதான்.

உன்மீதான நேசிப்பிற்கும் வெறுப்பிற்கும் இடைப்பட்ட வெளியில் நான் ரொம்பவே அலைந்து திரிந்தேன்.

என்னுடைய பிரச்சனை நீ எதைச்செய்தாலும் அதை என்ன நோக்கத்திற்காகச் செய்கிறாய் என்பதை அனுமானித்துவிடுகிறேன் என்பதுதான். குறிப்பாக நீ செய்யக்கூடிய காரியங்களும் அதன் நோக்கங்களும் சட்டென எனக்குப் புரிந்துவிடுகின்றன. உனது கணக்கீடுகள் புரிந்துவிட்ட பிறகு, அதற்கு எதிர்க் கணக்கீடுகளை நடத்த முடியுமா என்று யோசிக்கத் தொடங்கிவிடுகிறேன்.

உன்மீது இத்தனை வருத்தங்கள் இருப்பதை நீ அறிந்துகொள்ள நேர்ந்தால் நீ எப்படி யோசிப்பாய், என்ன நினைப்பாய், என்மீது கோபப்படுவாயா என்றெல்லாம் அவ்வப்போது நான் யோசிக்கத்தான் செய்கிறேன். நிச்சயமாக நான் இந்தக் கடிதத்தை உனக்கு அனுப்பப் போவதில்லை, என்றாலும் உன் மீதான எனது புகார்களும் அதிருப்திகளும் இத்தனை நீளமானதாக துல்லியமானவைகளாக இருப்பதை நீ அறிந்தால், ஒருக்கால் அறிந்துகொள்ள முடிந்தால்? என்னை வெறுத்துவிடுவாயா, கோபப்படுவாயா என்றெல்லாம் யோசிக்கிறேன். நிச்சயமாக இல்லை. உனக்கு என்மீது தாங்க முடியாதபடிக்கு வருத்தம் உண்டாகுமே தவிர என் மீது கோபமே வராது.

அதன் பிறகும்கூட நீ எனக்குத் தலைக்கு எண்ணை வைப்பதை, பிடிவாதமாகச் சாப்பிட வைப்பதை நிறுத்தி விடமாட்டாய். எனக்கான காரியங்களில் தொடர்ந்து உன்னை ஈடுபடுத்திக்கொள்வது உன் வாழ்வின் ஒருபகுதி.

ஆனால், அதே விஷயம் பிள்ளைகளுக்கும் இருக்க வேண்டும் என்கிற எதிர்பார்ப்புணர்வை எந்தப் பிள்ளைகளிடமும் நீ வைத்துக்கொள்ளவில்லை.

எனக்குப் பல வருடங்களாக உன்னைக் கட்டியணைத்துக் கொள்ள வேண்டும், முத்தமிட்டு என் அன்பைச் சொல்ல வேண்டும் என்றெல்லாம் விருப்பம் உண்டு. அதற்கான பல தருணங்கள், வாய்ப்புகள் இருந்தும் நான் அதனை எனது சங்கோஜத்தினால் இழந்திருக்கிறேன்.

நம் கலாச்சாரத்தில் கணவனைத் தவிர வேறு யாரையும் கட்டியணைத்து அன்பை வெளிப்படுத்துவதற்காக நாம் பழக்கப்படுத்தப்படவில்லை என்பதால் நான் அதைச் செய்ததேயில்லை.

ஆனால், தன் இறுதி நாட்களில் நினைவு தப்பிப் படுத்திருந்த உன் அம்மாவைப் பலமுறை அணைத்துக் கலங்கியிருக்கிறேன். முதியோர்களுக்கே உரிய வாசனையை முகர்ந்திருக்கிறேன். ஆனால், உன்னை இன்றுவரை கட்டி அணைத்துக்கொண்டதில்லை என்பதை நினைக்கும்போது வெட்கமாக உணர்கிறேன்.

இனிவரும் நாட்களிலும் அதற்கான வாய்ப்புகள் இல்லாமல் போய்விடுமோ என்கிற கவலை என்னுள் உருவாகிவிடுகிறது. உன் மீதான என் கோபம் அதன் பின்னணியில் இருக்கக்கூடுமோ என்கிற பயம்தான்.

சாப்பாட்டில் உப்பு இல்லாததும் மொட்டை மாடியில் காயவைத்த உப்புக் கண்டத்தை மழை வரும்முன் எடுக்க மறந்ததும் குழம்பில் புளி குறைந்ததும் கூட பல சமயங்களில் மாபெரும் கொலைக் குற்றமாக மாறிய சந்தர்ப்பங்களையும் நான் பார்த்துக்கொண்டுதான் இருந்திருக்கிறேன்.

காபி குடித்த டம்ளரைக் கழுவ மறந்து வைத்தால்கூட ஒரு கொடும் குற்றமாக மாற்றிவிடும் உன் மனநிலையை, உன் துன்பத்தை என்னால் சகித்துக்கொள்ளவே முடியாமல் ஆகிவிட்டது.

ஒன்றுமில்லாத விசயங்கள்கூட மாபெரும் பிரச்சனையாக மாறுவதற்கான மனச்சிக்கலை இந்த வாழ்க்கைமுறை உனக்குத் தந்திருந்தது. அதை எவ்விதம் சரிசெய்வது என்பதுதான் என்முன்னுள்ள கவலை.

இதற்கெல்லாம் உன்னைமட்டும் குறைசொல்வது என்பதும், உன்னிடம் கோபத்தைக் காட்டுவது என்பதும் நியாயமான விஷயம் இல்லை என்பதை நான் அறிவேன். அதனாலேயே நான் என்னையும் எனது கோபத்தையும் உன்மீதான வருத்தமாக மாற்றிக்கொண்டேன்.

சமையலறையில் நீ சமைப்பதைப் பார்த்திருக்கிறேன். எவ்வளவு அருமையாக, நளினமாக, லாவகமாக, நுட்பமாக, திட்டமாக, பிசிறில்லாதபடிக்கு நீ இயங்கிக்கொண்டிருப்பாய், சமயத்தில் ஒரு இயந்திரத்தைப்போல! இயந்திரங்கள் எப்போதுமே முகம் சுழிப்பதில்லை அல்லவா. அதையும் தாண்டி ஒரு பெருமிதத்தை நான் பார்த்திருக்கிறேன்.

கணக்கில்லாத வருடங்கள், கணக்கில்லாத தோசைகள், பிரியாணிகள், குருமாக்கள், இடியாப்பம், இட்லி, புரோட்டா, வறுவல் பொரியல் இவ்வளவும் செய்து முடித்த அலுப்பில்லாத ஒரு திருப்தி உன்னில் தேங்கியிருக்கும். யாராவது உன் சமையலைப் பாராட்டுவதற்காக எத்தனை மணி நேரமும் உன்னால் சமையலறையில் கழிக்க முடியும்.

உன்னைப்போன்ற அதே லாவகத்தை என்னிடமும் எப்போதும் எதிர்பார்க்காத நீ, உன் மருமகளிடம் மட்டும் எதிர்பார்த்து ஏமாறுவது என்ன நியாயம்? வேடிக்கையாக இருக்கிறது.

வழக்கம்கெட்ட குடும்பத்திலிருந்து வந்த கூறுகெட்ட வளாகவே உன்னால் அவளைப் பார்க்கவும் குறை சொல்லவும் முடிந்தது. ஏதோ அவள் பெரிய அளவு கோபத்தைக் காட்டவில்லை. நிஜமாகவே கூறுகெட்டவள்தான். தனக்குள்ளாக வழக்கமான முணுமுணுப்போடு நிறுத்திக்கொண்டாள். இந்நேரம் நானாக இருந்தால் சும்மா விட்டிருக்க மாட்டேன். ஒப்பீட்டு அளவில் என் மாமியார் உன்னைவிட எவ்வளவோ பரவாயில்லை. அவர் தனது குழந்தைப்பருவத்தில் பத்துக் குழந்தைகளை வளர்த்திருக்கவில்லை உன்னைப்போல. உன் கணவன் உன்னைப் படுத்தியதுபோல அவர் தன் வாழ்நாளெல்லாம் தன் கணவரால் புடுங்கி எடுக்கப்படவில்லை. அதுவும் காரணமாக இருக்கலாம். இதையெல்லாம் ஒப்பீடு செய்தும் கணக்குகளைச் சமன் செய்தும் எனது கோபத்தின் அளவுகளைக் குறைத்துக்கொள்வேன்.

உனது சின்னஞ்சிறிய கோபங்களும் வெறுப்பின் தன்மையும் எப்போதிலிருந்து அவளைத் துரத்துவதாக மாறிற்று என்பதை என்னால் சரியாகக் கணிக்க முடியவில்லை.

மீன் கழுவியபோது அவள் சொன்ன வார்த்தைகளிலிருந்தா, இல்லை, எனக்குப் புரியவில்லை. ஆனால் நீ அவள் இங்கிருந்து இவ்வீட்டிலிருந்து அகற்றப்படவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தாய்.

அவ்வார்த்தைகளுக்குப் பின்னணியில் அவளுக்கும் உனக்கும் மட்டுமே தெரிந்த, எனக்குத் தெரியாத ஒரு பகுதி ஏதோ இருப்பதாக உணர்வு இருந்தாலும், நான் அதைப்பற்றி யோசிப்பதற்கு விரும்பவில்லை.

ஆனால், அப்படி ஒரு காரியம் நடப்பதற்கான உந்து சக்தியாக நீ இருந்தாய். உன் விருப்பப்படியே ஷர்மிளா வீட்டைவிட்டுத் துரத்தப்பட்டாள்.

நிறைய காரணங்களாலும் நிறைய துவேஷங்களாலும் அவள் வெளியேற்றப்பட்டது உண்மைதான் என்றாலும், ஊரறிய ஒரு காரணமும் இருந்தது; அவளுக்குக் குழந்தை பிறக்கும் வாய்ப்பே இல்லை என்று ஊருக்கு முன்பாக பறைசாற்றப்பட்ட விஷயமாக இருந்தாலும், உனக்கு மட்டுமே தெரியும், அவளை நீ வெளியேற்றியதற்கான காரணம். உன் மகன் அப்பாவி. மாதாந்திரத் தீட்டு வருவதில்லை என்பதோ மூன்று மாதங்களுக்கு ஒருமுறை தீட்டு வருவதென்பதோ மலட்டுத்தன்மையின் அடையாளமாக உன்னால் நம்ப வைக்கப்பட்டவன். அதற்காக சில பரிசோதனைகளும் மருத்துவமும் இருப்பதையும் அவற்றை அவளது பெற்றோரின் வீட்டிலிருந்து செய்துவிட்டு வரட்டும் எனவும் காரணம் சொல்லி அனுப்பினாய்.

ஊருக்கு வேண்டுமானால் நீ ஒரு கதையைச் சொல்லலாம். என்னிடம் உன் கதையின் ஒரு அடியைக்கூட அளந்துவிட முடியாது என்பது உனக்கு எத்தனை அசௌகரியமாக இருக்கும் என்பதை யோசித்துப் பார்க்கிறேன். நீ உருவாக்கிய கதைகளால் உருவான வெற்றிடத்தில் நிறைந்திருக்கிறது வீடு. நீ மட்டுமே இருக்கக்கூடிய அவ்வீடு உனக்கு ஆசுவாசத்தையும் எனக்கு அசௌகரியத்தையும் ஒரே நேரத்தில் உண்டாக்குவதாய் இருக்கிறது. இவ்வெற்றிடத்தில் பங்கேற்க அல்லது வசிக்க எனக்கு ஒன்றும் பயித்தியமில்லை. உன்மீதான கோபத்தையும் வருத்தத்தையும் உள்ளடக்கியவளாக அவ்விடத்திலிருந்து என்னை அப்புறப்படுத்திக் கொள்வதைத்தவிர நான் செய்வதற்கு ஒரு காரியமுமில்லை.

ஒருமுறை நீயும் நானும் இதே அடுப்படியில் திண்ணையின் மீது அமர்ந்துகொண்டிருந்து ஊர் விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்தோம்.

உன் முகம் சிவந்து பழுத்த மிதுக்கம்பழம் போலிருந்தது. தடித்துத் தொங்கிய முகவாய்க்கட்டைச் சதை உன்னுடைய முகத்தின் அழகையே மாற்றியிருந்தது.

நீ ஷர்மிளாவிடம் கேட்டாய், "உன் அண்ணனுக்கு பெண் பேசி முடித்துவிட்டாயிற்றா" என்று. நானும்கூட அச்செய்தியை என் மாமியார் சொல்லிக் கேள்விப்பட்டுதான் இருந்தேன். அவசரமாக ஷர்மிளாவிடமிருந்து தலையாட்டி இல்லையென்பதுபோல மறுப்பு வந்தது. திருட்டுவிழி விழித்தவளாக "அது வந்து, இப்பதான் பேசிக்கிட்டு இருக்காகளாம்; இன்னும் பேசி முடிக்கலை".

உனக்கு வந்த ஆத்திரம் இருக்கிறதே, அது இதுவரை நான் காணாததாக இருந்தது. "பொத்துலே உன் வாயை. ஒரு சம்பந்தி நான் இருக்கேன். எனக்குச் சொல்லாம குசுகுசுன்னு பேசி முடிப்பாளா உங்க அம்மா? உனக்குதான் மாமியார் என்கிற மட்டுமரியாதை கிடையாதே. உன்னிடம் அதை நான் எதிர்பார்க்கலாமா? அது தேவையா எனக்கு? கருமம் இப்ப ஊருக்குள்ள கேட்டு நான் தெரிஞ்சுக்கறேன்.

என் தலையெழுத்து, என் மசுரே போச்சு போ."

தான் சம்பந்தி என்கிற அதிகாரமும், உன் மருமகள் வீட்டாருக்கு ஒரு ரகசியத்தை வைத்துக்கொள்ள உரிமை ஏதுமில்லை என்ற உன் பேச்சிருந்தது. நான் நிச்சயமாக அதை ரசிக்கவேயில்லை.

போதும் அம்மா, இந்தக் கடிதத்தை எழுதுவதற்காக நான் நினைவூட்டிக்கொண்ட சம்பவங்களின் வழியே நான் ரொம்பவும் மனதளவில் குழப்பத்தின் சுற்றுப் பாதையை அடைந்திருக்கிறேன். உன்னை வெறுப்பதற்கான அல்லது கோபம் கொள்வதற்கான ஸ்திரமான சில காரணங்களை நான் கண்டறிந்துகொண்டிருக்கிறேன். அவை என்னை அச்சத்திலோ பதற்றத்திலோ ஆட்படுத்தக் கூடியதாக இருக்கிறது. அந்த மனநிலை எனக்கே பெரும் கேடாக மாறிவிடுமோ என்கிற பயம் உன்மீதான நேசத்தினை இழந்துவிடக் கூடாது என்கிற சுயநலத்தின் பொருட்டே நான் இக்கடிதத்தை முடிக்க விரும்புகிறேன். ஒருவேளை அனுப்பப்படாத இக்கடிதம் எனக்கு உன்னோடு எஞ்சி

இருக்கும் தீராத வருத்தத்தின் திசையிலிருந்து விலகி வேறு ஒரு திசையின் மீது பயணிக்கிறதோ என்கிற அச்சம், அத்திசை என்பது கோபத்தின் திசையாக இருக்குமோ என்று நினைத்துக்கொள்கிறேன்.

எனக்குத் தெரியும் உனக்கு என்மீது கடுமையான மன வருத்தம் இருக்கக் கூடும் என்று. நீ செய்கிற எல்லாக் காரியங்களையும் குறிப்பாக ஷர்மிளாவின் விஷயத்தில் நான் கேள்வி கேட்பவளாகவும் விமர்சிக்கிறவளாகவும் இருக்கிறேன் என்பதனால். அதனை நீ காட்டிக்கொள்ளாமல் மிகச் சாமர்த்தியமாக இருப்பதையும் நான் அறிவேன். சமயங்களில் நான் கேட்கும் கேள்விகள் எதற்கேனும் பதில்தர விரும்பாமல் அலட்சியமான மௌனத்தை உன் முகத்தில் படியவிடுவதைக் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன். அது நிஜமாகவே என்னைத் துன்புறுத்தக் கூடியதொன்றாக இருக்கும்.

உனக்கே தெரியும் வீட்டில் நான் எப்படி எல்லாம் பொறுப்பற்றவளாக நடந்துகொள்வேன் என்று. உன் வாயிலிருந்தே ‘ஆம்பளைப்பயலாட்டம்’ நடந்து கொள்வதாகச் சொல்வாய். அதில் ஒருவிதமான பெருமிதமும் கவலையும் இணைந்தே இருக்கும்.

நான் எடுக்கும் எந்தப் பாத்திரத்தையும் கீழே போடாமல் இருந்ததில்லை. எந்தப் பொருளையும் சிந்தாமல் இருந்ததில்லை.

முன்பெல்லாம் அது குறித்து உனக்கு வராத கோபத்தை, பிறகு வந்த நாட்களில் என்னால் எதிர்கொள்ள முடிந்தது. (அதாவது நான் ஷர்மிளாவை ஆதரித்துப் பேசும் காலகட்டத்திலும், உன் மீதான எனது விமர்சனங்களை முன்வைக்கும் காரணத்தினாலும் நீ என் மீதான குறைகளைத் தேட ஆரம்பித்தாய் என்பதை நான் அறிவேன்.)

ஷர்மி இனி திரும்பி வருவாளா வரமாட்டாளா என்பதில் எனக்கு எந்தச் சந்தேகமுமில்லை. அதற்கான கதவுகள் அடைக்கப்பட்டுவிட்டன என்பதை நான் அறிவேன். அவளது மாதாந்திரத் தீட்டு ஒழுங்கு செய்யப்படாத பட்சத்தில் அதற்கான வாய்ப்பு இனி இல்லவே இல்லை. நீ விரும்பாத விஷயம் நடக்க நீ ஒன்றும் முட்டாள் இல்லை. ஆமாம் சமீப காலமாகத்தான்; நான் முன்பு நினைத்தது போல நீ ஒன்றும் முட்டாளோ அப்பாவியோ இல்லை.

இப்போது என்முன்பு இருப்பதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். அதைச் சவால் என்றுதான் நினைக்கிறேன்.

என் வாழ்வில் மிகப்பெரிய மனத் துக்கத்தைத் தரக்கூடிய ஓரிடத்தில் நான் நின்றுகொண்டிருப்பதாக நினைக்கிறேன்; நம்புகிறேன் அம்மா. நான் உன்னை வெறுத்துவிடக் கூடாது. உன்மீது எனக்கு இருக்கும் கோபம் ஒன்றுமில்லாமல் பனியைப்போல விலகிப் போய்விட வேண்டும்.

இதெல்லாமும் எதிர்பார்ப்பு மட்டும் தானே தவிர, அது குறித்து எளிய நம்பிக்கை ஏதும் என்னிடம் இல்லை.

இப்போதெல்லாம் என் மனதில் இருக்கும் குழப்பமும் வெறுப்பும் பயமும் அவநம்பிக்கையும் சந்தேகமும் அவமானங்களும் கோபமும் என்னைச் சுற்றியே மிகப்பெரிய வலைப் பின்னலாக சூழ்ந்து கொண்டதான மன நிலைக்குள் நின்று சுழல ஆரம்பித்து இருக்கின்றன. ஒரு பயித்தியத்தைப் போல எல்லாவித மன அவசங்களும் சூழ்ந்துகொண்டுவிட்டதாக நம்புகிறேன். நான் உருவாக்கிய எல்லாவித பாதுகாப்புச் சுவர்களையும் உன்னுடைய செயல்கள் உடைத்தெறிந்து விட்டதாக உணர்கிறேன்.

உன் ஒவ்வொரு செயலுக்கும் கற்பிக்க முயன்ற, எனக்கு நானே சமாதானப்படுத்துவதற்கான காரணங்களை, அதாவது சப்பைக்கட்டுகளை மனத்திற்குள் வரிசைப்படுத்திப் பார்க்கிறேன். நிஜமாகவே அவை கேலிக்கூத்தாக இருந்து என்னை எள்ளி நகையாடுகின்றன. நான் என்னையே ஏமாற்றிக்கொள்ள போடும் கணக்கீடுகளை எந்த வகையில் சேர்க்க முடியும்?

என் மனத்தை உராய்ந்தபடி இருக்கின்ற இவ்வுண்மைகளில் நான் என்னை மனச்சோர்வில் ஆழ்த்திக் கொள்கிற தருணங்களை இன்றும் அதிக அளவில் உணர்ந்துகொண்டிருக்கிறேன்.

நமது சந்தேகங்கள் போலவே ஆழமானவை நம் மனச்சோர்வுகள். அவற்றைக் கடந்து செல்வது என்பது ஒரு வழிப்பாதைபோல. திக்கற்ற நிலையிலிருந்துதான் அதனை நான் எதிர்கொள்கிறேன். கொடிய கனாவொன்று மனதின் ஆழத்தில்

பிய்த்தெறியவியலாதபடிக்குப் பசைவைத்து ஒட்டப்பட்டுவிட்டதுபோல என்னிலிருந்து நீங்க மறுக்கிறது.

வழக்கம் போலத்தான் இந்த வருட ரம்ஜானுக்கும் நாம் ஒன்றுகூடினோம். நம் வீட்டின் நீண்ட சாப்பாட்டு மேசையில் (அது ஷர்மிளாவின் சீதனமாக நமக்கு கிடைத்த ஒன்று) வரிசையாக அடுக்கப்பட்ட ஆட்டிறைச்சியிலான பிரியாணி, கோழி வறுவல், இனிப்பு சட்னி, தயிர் கிச்சடி என்று விதவிதமான உணவு வகைகள் நமக்கு மட்டுமே. வைக்கப்பட்டிருந்த தட்டுகளின் முன்பாக அமரும்போது நான் கடந்த இரண்டு வருடங்களாக ஷர்மிளா உடன் இருந்ததையும் நம்மோடு அமர்ந்திருந்ததையும்,

துரதிர்ஷ்டவசமாக நினைவுபடுத்திக் கொண்டேன். ரம்ஜானுக்கு அவர்களுடைய வீட்டிற்கு செல்லவேண்டும் என்று அவள் விரும்பினாலும் அண்ணன் அவளை அனுப்பியதில்லை. இங்கே சாப்பிட்டுவிட்டுப் பிறகுதான் போக வேண்டும். அது ஒன்றும் அன்பினால் இடப்பட்ட கட்டளை அல்ல. உனக்கு வீட்டுவேலைக்கு உடனிருக்க வேண்டும் என்கிற சுயநலம்தான் பின்னணியில் இருந்தது என்பதை நான் அறிவேன்; அவளும் அறிவாள்.

இந்த முறை அவளில்லாத வெற்றிடம் என்னை அதிகபட்ச சங்கடத்திற்கு உள்ளாக்கி, தொண்டையில் உணவை இறங்கவிடாமல் செய்தது.

ஆனால், என்னைத்தவிர யாருக்குமே, அப்படி ஒருத்தி இங்கே இருந்தாள் என்பதைப் பற்றிய நினைவோ உறுத்தலோ இருப்பதாகத் தெரியவில்லை. அது எனக்கொன்றும் ஆச்சர்யமான விஷயம் அல்ல. நான் ஒன்றும் எதிர்பார்க்கவும் இல்லைதான்; என்றாலும், என்னளவில் அது மிகப்பெரிய துக்கத்தை தரக்கூடியதாக இருந்தது.

நம்மோடு இருந்த ஒருவர் அங்கே இல்லாமல் போய்விடுவது என்பது சற்று துரதிர்ஷ்டவசமாக பெரும் வருத்தத்தைத் தரக்கூடியது என்றாலும் அப்படியான விஷயம் உன்னிடம் துளி அளவுகூட இல்லை என்பதே எனக்குத் தாங்கவியலாத வெறுப்பைத் தரக்கூடியதாக இருந்தது தெரியுமா?

ஒரு வெற்றிடம் உருவாக்குகிற அதிகபட்ச வலியை நான் எப்போதுமே சுலபமாக நினைக்க விரும்புவதில்லை. ஒருவேளை அது என்னிடமுள்ள ஒரு பிரச்னையாக மட்டுமே

இருக்கக்கூடும். மற்றவர்களுக்குமான பிரச்னையாக நான் அதனை யோசிக்க நினைப்பது என் அறியாமைதான். ஆனாலும் நீயோ அண்ணனோ மற்றவர்கள் என்று நான் எவ்வாறு யோசிக்க முடியும். இதே வீட்டில் நான்கு வருடங்களுக்கும் மேலாக கூடவே வாழ்ந்துகொண்டிருந்த, தன்னுடனிருந்த மனைவியைத் துரத்திவிட்டு அது குறித்த எந்த யோசனையும் இல்லாதபடிக்கு இருக்கக்கூடிய ஒரு மனிதனை பார்க்கப்பார்க்க எனக்கு ரத்தத்தின் கொதிநிலை கூடித்தான் போனது.

நல்ல பணிவுகூடிய வேலைக்காரியாக, வீட்டைப் பொறுப்போடு பார்த்துக் கொள்ள ஏதுவாக இருந்த ஜீவனைத் துரத்திவிட்டுவிட்டு தீராத முட்டுவலியோடு, நீ உன் வீட்டையும் சமையலறையையும் புகாரும் சலனமும் இன்றிச் சுமந்து திரிவது எனக்குக் காணக்கிடைக்கிறபோது அது எரிச்சலூட்டக் கூடியதொரு நிகழ்வாக இருக்கிறது.

அன்புள்ள அம்மா, நீ எந்தக் கணத்தில் இப்படி ஒரு முடிவை, அவளைத் துரத்திவிடுகிற முடிவை எடுத்தாய் என்பது இன்றும் சரியான அளவுக்கு எனக்குப் புரிந்துகொள்ளக் கூடியதாக இல்லை.

ஆனால் அந்த முடிவு சரியானதுஅல்ல என்பதில் மட்டும் எனக்குச் சந்தேகமேயில்லை. இப்போதெல்லாம், நான் அத்தாவை நினைத்துக்கொள்கிற சந்தர்ப்பங்கள் சற்று அதிகம்தான்.

அவர் இருந்திருந்தால் ஒருவேளை அம்மாவையும் அண்ணனையும் திட்டி ஷர்மிளாவை அனுப்பவிடாமல் செய்திருப்பாரோ என்று தோன்றிக்கொண்டிருக்கிறது. அவருக்கு நீ எதைச் செய்தாலும் அதற்கு மாற்றாக எதையாவது செய்தாக வேண்டும் என்பதனால் அவர் நிச்சயமாக இதனை நடக்கவிட்டிருக்க மாட்டார் என்று நம்புகிறேன். நான் அதிகமும் நேசித்திராத என் தகப்பனை நினைவு கூர்வதற்கு ஒரு சந்தர்ப்பத்தை நீ இன்று உருவாக்கியிருக்கிறாய். உன்னால் அது உருவாகியிருக்கிறது. நிஜமாகவே அது துரதிர்ஷ்டமானது என்னைப் பொறுத்த அளவில்.

ரம்ஜான் நாளன்று என்னால் சாப்பிடவே முடியவில்லை. சாப்பாடு தொண்டையிலிருந்து இறங்காமல் கஷ்டப்பட்டேன்; அது உனக்குத் தெரியாது. நான் அன்சாரியோடு சாப்பிட அமர்ந்ததனால் நீ மருமகனுக்கு எதிரில் வரவில்லை. அதனாலேயே நான் சாப்பிடாமல் இருந்ததை நீ அறிந்திருக்கவில்லை.

நீ சம்பந்தி என்கிற நிலையிலிருந்து காட்ட முயன்ற அதிகாரங்களை ஷர்மிளா வீட்டார் துளிக்கூட பொருட்படுத்தாமல் இருந்தது உன் மாமியார் என்கிற அதிகாரங்களை நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தை உனக்கு உருவாக்கிற்று என்பதையும் அதை நோக்கி உன்னைத் தள்ளிற்று என்பதையும் நான் கவனித்தபடி இருந்தேன்.

எறும்பு சிறுகச்சிறுக சேகரித்த உணவைப்போல நீ சேகரித்துவைத்த குரோதங்கள் வெடிப்பதற்கான காரணமாக அன்று ஷர்மிளா உன்னைப் பார்த்துச் சொன்ன வார்த்தைகள்தான் உன்னை அத்தனை தூரம் கோபப்படுத்துவதற்கான காரணம். அவ்வார்த்தைகளின் அர்த்தத்தை நிஜமாகவே என்னால் புரிந்துகொள்ளவோ யூகித்துக்கொள்ளவோ இயலவில்லை என்றாலும் எதுவாக இருந்தாலும் என்னால் அதை ஏற்றுக்கொள்ளவியலாது அம்மா.

நீ அடைய விரும்பும் வெற்றிக்கான ஆதரவை என்னிடத்தில் நீ எதிர்பார்த்துவிட முடியாது. உனது விருப்பத்திற்கான வெற்றியாக நீ அதைக் கொண்டாட முடியுமே தவிர வெற்றி என்பதன் அர்த்தத்திலிருந்து விலகி நெடுந்தூரம் போய்விட்டது. பிறருடைய தோல்வியின்மீதும் வலியின்மீதும் கட்டி எழுப்பப்படுகிற வெற்றியை நான் எப்போதும் ஏற்றுக்கொள்ள விரும்புவதில்லை. உன்மீது அதிகாரத்தைச் செலுத்தித் தன் வெற்றியை நிறுவ முயன்ற அத்தாவின் வெற்றியை நான் எப்படி எப்போதுமே வெற்றியென நம்பியதில்லையோ அதே போலத்தான் இதுவும்.

அன்புள்ள அம்மா நீ உனக்குக் கிடைத்தவற்றிலிருந்து சிலவற்றை ஷர்மிக்கும் சாத்தியமாக்கினாய். உனக்குக் கிடைத்த வன்முறையை அதன் ருசியை அறிந்திருக்கும் நீ, அதனை விழுங்கிச் செறித்துவிடு. வேறு எவருக்கும் தரவேண்டும் என்று நினைக்காதே. நீ தர விரும்புவது பரிசுப் பொருளல்ல. உனக்குக் கிடைத்த கோபங்களை, உன்மீது செலுத்தப்பட்ட வன்முறையை, அதிகப்பட்ச புறக்கணிப்பை, உனக்கு வலித்திருக்கலாம், அதே வலியை வேறொருவருக்குப் பரிசளிக்க விரும்புவது எவ்வகையில் நியாயமாக இருக்க முடியும்?

எளிய மனிதர்களான நாம் நமக்குக் கிடைத்த எல்லாவற்றையும் பிறருக்குத் தந்துவிட விரும்புகிறோம் (பொருட்களைத் தவிர) அன்பை அல்லது கோபத்தை அல்லது அதிகாரத்தை, புறக்கணிப்பை இப்படி... நமக்குக் கிடைத்தவற்றில் பலவற்றைப்

பிறருக்குப் பரிசளிக்க விரும்புகிறோம்; அப்படித்தான் நான் உன்னுடைய எல்லா காரியங்களையும் புரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதேசமயத்தில் நீ உன் உயிரைவிட அதிகமாக நேசிக்கக் கூடிய உனது மகனுக்கு தந்திருக்கும் துன்பத்தைப் பற்றிக் கொஞ்சமாவது யோசித்திருப்பாயா என்பதையும்கூட.

அவனுக்கு மனைவியின்மீது பெரிய அன்பும் அக்கறையும் இல்லை என்பது உண்மைதான். இருந்தாலும் நீ அவனுக்கு வாழ்க்கையின் மீது பிடிப்பு உருவாக்க ஒருபோதும் எத்தனித்ததில்லை.

அவனின் பொறுப்பற்ற தன்மைக்குத் தோதாக நீயும் நடந்துகொள்கிறாய் என்பதை நீ அறிந்திருக்கிறாயா இல்லையா என்பது எனக்கு இன்றும் புரியவில்லை. நீ உருவாக்கக்கூடிய வெற்றிடம் அவனை இன்னும்கூட தன்னைத் தானே அழித்துக் கொள்வதற்கும் பொறுப்பற்ற தன்மைக்குள் மேலும் அவனை இட்டுச் செல்வதற்கும் ஏதுவாக இருக்கும் என்பது உனக்குத் தெரியாமல் இருக்காது. இருந்தும்கூட அதற்கும் மேலாக உனது விரோதங்களும் வெற்றியும் இப்போதும் உனக்கு முக்கியமானதாக மாறிவிட்டது என்பதைத்தான் என்னால் நம்ப முடியவில்லை.

இப்போதெல்லாம் எங்கள் யாரிடமும் காட்டிவிட முடியாத கோபத்தை உன்னுள் கொதித்துக் கொண்டிருந்த அதன் தீவிரத்தைச் சத்தமிடுகிற பாலிதீன் பையைப்போல உன்னளவில் வைத்துக்கொள்வதையும் நிகழ்த்திக்கொண்டிருப்பதையும் பார்த்துக்கொண்டு தானிருக்கிறேன். சமையலறைக்குள் புழங்கித் திரிகிற உனது முணுமுணுப்பும் அதன் வலிமையற்ற வீச்சும் என்னைக் கடுமையாகத் துன்புறுத்திக்கொண்டிருந்த நாளொன்றின் கனம் தாளாமல் நான் எவ்வளவு மனமுடைந்து அழுதேன் என்பது உனக்குத் தெரியாது.

நேற்றிரவு தற்செயலாக ஷர்மிளாவை பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தபோது சற்று தடுமாறித்தான் போனேன். எனக்கு ஜுரம் என்பதால் நான் சென்றிருந்த மருத்துவமனைக்கு அவளும் தன் தாயாருடன் வந்திருந்தாள். நான் பேசுவதற்கு விரும்பி அவள் அருகாகச் சென்றபோது, அவள் அதனைப் புறக்கணிப்பதற்கு விரும்பியவளாக தலையைத் திருப்பிக்கொண்டாள். அவருடைய அம்மாவின் பார்வையிலோ என்மீதான தீர்க்கவியலாத குரோதம் குடிகொண்டிருந்ததைப் பார்க்க முடிந்தது.

நானே குற்றம் செய்தவள் போல் அவர்களால் பார்க்கப்பட்டேன். நானும் அதை அப்படித்தான் யோசித்தேன். அவர்களது இடத்திலிருந்து பார்க்கும்போது அது அப்படித்தான் இருக்கமுடியும் என்பதை நான் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

எனக்கு முன்பாக அவர்கள் மருத்துவரின் அறைக்குள் சென்றுவிட்டு வெளியேறும் சமயத்தில் அவர்களை நான் பின்தொடர்ந்து செல்ல விரும்பினாலும் சற்று நேரத் தடுமாற்றம் கொண்டவளாக தயங்கி நின்றிருந் தேன், ஷர்மிளா தனது தலையசைப்பில் தன்னைப் பின்தொடர்ந்து வருமாறு அழைத்தபோது நான் சற்று ஆவல் மேலிட அவளது பின்னால் ஓட்டமும் நடையுமாகப் போய் நின்றேன். அதற்குள்ளாக நாங்கள் மருத்துவமனையின் வாயிலிலிருந்து தெருவை எட்டியிருந்தோம்.

இரவு எட்டுமணி என்பதால் தெருவில் பெரிதாக வெளிச்சம் ஏதுமில்லாமல் இருந்தது. நான் ஷர்மிளாவிடம் எப்படி இருக்கிறாய் என்று ஆர்வமாகக் கேட்டது வெற்று வார்த்தை என்பது போலத்தான் அவளுக்கு இருந்திருக்கக்கூடும். அவள் அப்போது மிக நேராக என்முகத்தைப் பார்த்தபடி நின்றுகொண்டிருந்தாள். அவளுக்கும் அவளது தாயாருக்கும் இடையே எனக்கான பதிலை யார் சொல்வது என்கிற குழப்பமும் ஆத்திரமும் மிதந்துகொண்டிருந்ததை என்னால் பார்க்கமுடிந்தது.

ஷர்மிளாவேதான் சொன்னாள், உங்க அம்மாவுக்கு சந்தோஷம்தானே. இப்ப நிம்மதியா இருக்கச் சொல்லு. மகனப் போட்டுப் படுத்துகிற சொல்லு, ஒங்க சின்னத்தாகிட்ட படுத்தது மாதிரி.

அவள் வாயிலிருந்து துள்ளிக்குதித்து வந்த அவ்வார்த்தைகள் என்னை அடித்து வீழ்த்தின. அவளும் அவளது அம்மாவும் என்னைத் தாண்டி திரும்பிப் பார்க்காமல் நடக்க ஆரம்பித்தபோது நான் என்னையறியாமல் தெருவில் அப்படியே தரையில் குத்துக்காலிட்டு அமர்ந்துவிட்டிருந்தேன்.

என்னை அடித்து வீழ்த்தியது அவளது கோபமான வார்த்தைகள் என்பதைவிட இறுதியாக அவள் சொல்லி விட்டுச் சென்ற அவ்விஷயம்தான் என்பதை உணர்ந்து கொள்ள எனக்குச் சில நிமிடங்கள் தேவையாக இருந்தன.